Registered No. M-4433. Madras War Review (TAMIL) 23-6-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம்௵ ஜூன்மீ 23உ, வெள்ளிக்கிழமை இதழ் 42

விடுதலை முயற்சிக்கு முழு வெற்றி

மிஸ்டர் சர்ச்சில்.

ஜெர்மானியர்கள் நம்மீது சாற்றும் பழியினின்று விரைவில் மீளுவோமா என்பது அடுத்த சில மாதங்களில் நடைபெறும் சம்பவங்களிலிருந்து தெரிந்து விடலாம். இந்தப் போராட்டம் நெடுநாட்கள் தொடர்ந்து நடந்து முடிவடைகிற போது. எதிரிகள் மகா கோரமான நிலைமைக்கு உள்ளாவார்கள்.

டேரானில் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களெல்லாம் இன்னும் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை ; என்றாலும், அவை படிப்படியாக செயலாற்றப்படு கின்றன. இப்போது நேச நாட்டினர் நடத்தும் போராட்டத்தின் பயனாக, வேனிற் காலத்தில், சுயேச்சை என்னும் லட்சியம் பூரண வெற்றி பெறலாம்.

மிஸ்டர் சர்ச்சில், சமீபத்தில் கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம் : மிஸ்டர் சர்ச்சில்	1
விடுதலை முயற்சிக்கு முழு வெற்றி	1
முரசொலி	2
பருத்திக் கொட்டை ஏற்றுமதிக்குத் தடை	2
தலையங்கம் : ரஷ்ய-பின்லாந்துப் போர்	3
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4
உலக சமாதானத்திற்கு நேச நாடுகள் முயற்சி	5
துனிசிய வெற்றிக்குப் பின் அச்சநாடுகளின் வீழ்ச்சி	7
அருணோதயம்	9
முதல் வெற்றியின் ரகசியங்கள்	11
யுத்த நாட் குறிப்புக்கள்	12
வானொலி நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

பிரிட்டன், ரஷ்யா அல்லது அமெரிக்காவிற்கு விரோதமாக துருக்கியின் பலம் பயன்படக் கூடிய நிலைமை ஒருபோதும் ஏற்படாது.

—எம். சரஜோக்லு, துருக்கி பிரதம மந்திரி
ஜூன் 15-ம் தேதி கூறியது.

*   *   *   *   *   *

“ஜப்பானின் கேந்திர ஸ்தானத்தை நாம் அடுத்தடுத்துத் தாக்குவோம். நமது புதிய மாபெரும் கோட்டைகள் ஜப்பான் தீவைத் தாக்க இப்போதுதான் ஆரம்பித்திருக்கின்றன.”

—மிஸ்டர் ராபர்ட் பிட்டர்ஸன், அமெரிக்க யுத்த உதவி மந்திரி
ஜூன் 15-ம் தேதி கூறியது.

பருத்திக் கொட்டை ஏற்றுமதிக்குத் தடை

அரசாங்க ‘டெவெலெப்மெண்ட் இலாக்காவின் 1944-ம௵ ஜூன்மீ 12உயிட்ட. 2640-ம் நம்பர் எண்ணுள்ள கட்டளையின் ஒரு பகுதி வருமாறு :—

1944-ம௵ ஜனவரி மீ 11உ வெளிவந்த ‘போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜெட் 1-வது பகுதி 25-வது பக்கத்தில் காணப்படும், 1944-ம௵ ஜனவரிமீ 5உயிட்ட’ டெவெலெப்மெண்ட் இலாக்காவின் விளம்பரம் ரத்தாகி, இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 81-வது விதியின் 2-வது உள் விதியை யொட்டி, தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு மேன்மை தங்கிய சென்னை கவர்னர் கீழ்க் கண்ட கட்டளையைப் பிறப்பிக்கிறார் :—

இவ்வருஷத்தின் எந்தப் பகுதியிலும், ரயில் மூலமாகவோ, ரோடு மூலமாகவோ, கடல் மூலமாகவோ, இராமனாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஜில்லாவின் வைகை ஆற்றிற்குத் தெற்கேயுள்ள பாகம், ஆகிய இடங்களிலிருந்து, சென்னை சிவில் சப்ளை கமிஷனர் அல்லது அவரால் அவர் சார்பில் அனுமதிக்கப்பட்ட அதிகாரி ஆகியோரிடமிருந்து வழங்கப்படும் அனுமதிச் சீட்டுக்களின்றி, அந்தப் பகுதிகளுக்கு வெளியே, பருத்திக் கொட்டை ஏற்றுமதி செய்யலாகாது.

S. S. S.

ஒரே தடவையில் 10 ரூபாய் மீதி செய்ய முடியாவிட்டால், தினம் 4 அணாவுக்கு சேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கி மீதி செய்ய வழி தேடுங்கள்.

நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை எவ்வளவு சீக்கிரம் வாங்க கூடும் என்பதை நீங்கள் அறிந்து ஆச்சரியப்படுவீர்கள்.

நாஷனல் சேவிங்ஸ் செர்டிபிகேட்களை வாங்குங்கள்.

S. S. S.

என்றாவது ஒரு நாள் உங்கள் மகளுக்கு திருமணமாக வேண்டும்—அன்று ஸ்திரிதனம் அளிக்க வேண்டும்.

நாஷனல் சேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளில் இப்பொழுது ரூ. 10 முதலீடு செய்தால், 12 வருஷத்தில் ரூ. 15 ஆக மாறும்.

சில நாஷனல் சேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளை இப்பொழுதே வாங்குங்கள்.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ஜூன்மீ 23உ, வெள்ளிக்கிழமை | இதழ் 42

ரஷ்ய-பின்லாந்துப் போர்

இரண்டாம் போர் முனை ஆரம்பமாகி ஒரு வாரத்தில், மற்றொரு போர் தொடங்கி விட்டது. ரஷ்யா, பின்லாந்து மீது படை எடுத்தது. பின்லாந்து அரசாங்கம் ஜெர்மன் போடும் தாளத்திற்கு தக்கபடி ஆடிக் கொண்டிருந்தது. பின்லாந்து ஒரு கேந்திர ஸ்தானம் போல நாஜிகளுக்கு உதவிக் கொண்டிருந்தது. ரஷ்யாவிற்கு வட துருவக் கடல் வழியாகவும் தளவாடங்களும் சப்ளைகளும் வர வேண்டும். இவைகளைத் தடுப்பதற்கு பின்லாந்து ஏற்ற தோர் தளமாக அமைந்திருந்தது. அன்றியும் நார்வே அரசாங்கத்தின் மீது தம் ஆதிக்கத்தைச் செலுத்த ஜெர்மானியர்களுக்கு மிகவும் உதவியா யிருந்தது பின்லாந்து. ஜெர்மன் ஆதிக்கம் பின்லாந்தில் இல்லா விட்டால், நார்வே முதலிய நாடுகள் ரஷ்யா முதலிய நேச நாடுகளோடு உறவு கொண்டிருக்க முடியும். ரஷ்ய முன்னேற்றத்தை ஜெர்மானியர்கள் தடுப்பதற்கு, பின்லாந்து ஏற்ற தோர் கேந்திர ஸ்தானமாக அமையும். இவை மட்டு மன்றி தம் கப்பற் படைகளைப் பந்தோபஸ்தாக நிறுத்தி வைப்பதற்கு விபோர்க் என்னும் துறைமுகப் பட்டணமும் இருக்கின்றது. இது ஒரு ரயில்வே ஜங்ஷனுங் கூட. ஆகவே இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பின்லாந்தைப் பாதுகாக்க ஜெர்மானியர்கள் மிகச் சிறந்த ஏற்பாடுகளெல்லாம் செய்து வைத்திருந்தனர். அங்குள்ள கரேலியன் பூசந்தியில் மூன்று அரண்கள் கட்டினர்கள். இம் மூன்றும் ஒன்றிற் கொன்று மிக நெருங்கிய தொடர்புடையன. "கரேலியன் அரணை" வகுத்தவர் டாட். கட்டி முடித்தவர்கள் ஜெர்மன் இஞ்சினீர்கள். இந்த அரணையும் புதிய மானர்ஹீம் அரணையும் ரஷ்யப் படைகள் தகர்த்து விட்டன. விபோர்க் என்னும் துறைமுகப் பட்டினத்தையும் கைப்பற்றி விட்டன. இது ஒரு ரயில்வே ஜங்ஷனென்று ஏற்கெனவே கூறினோம். பின்லாந்தின் தலை நகரமான ஹெல்சிங்கிக்கும் இங்கிருந்து ஒரு ரயில்பாதை போகிறது. விபோர்க்கிலிருந்து மற்றும் பல முக்கியமான இடங்களுக்கு ரயில் பாதைகள் போகின்றன. அன்றியும் இந்தத் துறைமுகம் பின்லாந்து வளைகுடாவின் வடகோடியிலிருப்பதனால், வியாபாரத்திற்கும் மிகவும் பொருத்தமானது. இவ்வளவு சிறந்த தோர் கேந்திர ஸ்தானம் ரஷ்யர்கள் வசமாயிற்று. இதினின்று ஒரு விஷயம் மிகத் தெளிவாக தெரிகிறது. ஜெர்மானியர்கள் கை, பின்லாந்தில் ஓங்க முடியாது என்று "உள்ளங்கை நெல்லிக் கனி" போல் விளங்குகிறது.

இந்தப் போரில் இறங்க ரஷ்யர்கள் விரும்பவில்லை. பின்லாந்தோடு சமாசத்தையே நாடினர்கள். பின்லாந்து அரசாங்கமோ நாஜிகளின் கைப் பொம்மையாகத் தான் இருந்தது. ஆகவே, ரஷ்யா விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள பின்லாந்து மறுத்தது. சென்ற மார்ச்சு மாதம் மாஸ்கோவிற்கு வந்திருந்த பின்லாந்து தூது கோஷ்டியினிடம் சோவியத் அரசாங்கம் சில ஏற்பாடுகளைக் கூறினது, அந்நிபந்தனைகளில் முக்கியமானவை :—

1. ஜெர்மனியோடு பின்லாந்து உறவு கொள்ளலாகாது.

2. ஜெர்மன் படைகள் வெளியேற்றி விடப்படவேண்டும். அவசியமானல் சோவியத் படைகளும் இதற்கு உதவும்.

3. சமாதான காலத்திற்கு வேண்டிய அளவுக்கு மட்டும் பின்லாந்து தன் படைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

4. 1940-ம் வருஷம் சோவியத்-பின்லாந்து எல்லையா யிருந்ததையே, இப்போதும் எல்லையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

5. பாட்ஸமோவை சோவியத் அரசாங்கத்திற்குக் கொடுத்து விடவேண்டும்.

6. ஹாங்கோ சம்பந்தமாகத் தனக்குள்ள உரிமையை ரஷ்யா விட்டுக் கொடுக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளை ஒப்புக்கொள்ள பின்லாந்து அரசாங்கம் மறுத்து விட்டது ஒரு வியப்பில்லை. ஏனென்றுல், பின்லாந்து மக்களின் நன்மையில் ஒரு சிறிதும் அக்கரை யில்லாத ஜெர்மானியர்கள் தானே பின்லாந்து அரசாங்கத்தின் சூத்திரக் கயிற்றை ஆட்டிக் கொண்டிருந்தார்கள். எத்தனை நாளைக்குத் தான் இது பலிக்கும். இப்போது அங்கே ஜெர்மன் ஆதிக்கம் குறைந்த வுடனே, அவர்களுக்கிருந்த செல்வாக்கும் மங்கி விட்டது. புதிய தோர் அரசாங்கம் இப்போது அமையக் கூடு மெனத் தெரிகிறது. இந்த அரசாங்கம் நாட்டின் நிலைமையை நன்கு சீர்தூக்கிப் பார்த்து நேச நாடுகளோடு ஒப்பந்தம் செய்து கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம். அப்போது நார்வேயும் ஜெர்மன் ஆதிக்கத்தினின்று மீட்சி பெறும். இம் மீட்சியின் பயனாக, ஜெர்மானியர் வயப்பட்ட பல நாடுகள் மீட்சி பெற இட முண்டாகும்.

இன்று ஜெர்மனி உள்ள நிலைமை மிகவும் பரிதாபத்திற்கிடமானதா யிருக்கிறது. நாலாபுரமும் தாக்குதல். அதுவும் கடுந் தாக்குதல்கள். உரலுக்கு ஒரு பக்கம் இடி ; மத்தளத்திற்கு இருபக்கமும் இடி ; ஆனல் ஜெர்மனிக்கோ எல்லாப் பக்கங்களிலும் இடி தான். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" அல்லவா ? இந்த வினைவினற் தான் உலகம் இன்ப மடையப் போகிறது. இந் நந்நாளையே எல்லா மக்களும் ஆவலோடு எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறர்கள்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

படையெடுப்பின் முதற் கட்டம் முடிவடைந்து விட்டது. படையெடுப்பின் முக்கியமான நோக்கங்கள் பல வற்றில், செர்பர்க் தீபகற்பத்தைத் துண்டிப்பதும் ஒன்று. இதில் பெரும் வெற்றி நமக்குக் கிடைத்துவிட்டது. முக்கியமான துறைமுகப் பட்டினமான செர்பர்க் தனிமையாக்கப்பட்டு விட்டது. அந்தத் தீபகற்பத்தின் வட பகுதியும் துண்டிக்கப் பட்டுவிட்டது. இங்கே தான் ஏராளமான தேவைப் பொருட்களும் பாதுகாப்புத் தளவாடங்களும் ஜெர்மானியர்கள் திரட்டி வைத்திருக்கிறார்களென்று கருதப்படுகிறது.

படையெடுப்பின் முதற் கட்ட முடிவு: ஜெர்மன் படைத் தலைவர் திண்டாட்டம்.

படையெடுப்பின் ஆரம்பக் கட்டத்தில், படைகளைக் கொண்டுபோய் எதிரி கரைகளில் இறக்கி, கடற்கரையில் இடங்களைக் கைப்பற்றி ஊன்றிக் கொள்ளவேண்டும். இந்த வேலை வெகுவாக முடிந்துவிட்டது. படை யெடுத்திருக்கும் நேசநாட்டுப் படைகளுக்கு, பக்கபலமான படைகளும் சப்ளைகளும் தொடர்ச்சியாக வந்திறங்குமென்பது எதிர் பார்க்கக் கூடியது தான். இந்தப் போராட்டம் இரண்டாவது கட்டத்தை யடைந்து விட்டதாகவும் சொல்லலாம். முன்னேறிக் கொண்டிருக்கும் நேசப் படைகளைத் தடுக்கவோ, தாமதிக்கும்படி செய்யவோ வேண்டி, ஜெர்மானிய இருப்புப் படைகள் கொண்டுவரப் படுகின்றன. இப்போது நடைபெறும் போராட்டம் பெரும் போராட்டந்தானா, அல்லது, பெரும் போராட்டத்தின் முற்பகுதியா என்று தீர்மானிக்க மாட்டாமல் ஜெர்மன் படைத் தலைவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த கட்டத்தில், தம் போர்த் தந்திரக் கையிருப்புப் படைகளைப் பயன்படுத்துவதா அல்லது முக்கியமான கையிருப்புப் படைகளைப் பயன்படுத்துவதா என்பது பற்றி முடிவு கட்டமுடியாமல் ஜெர்மன் படைத் தலைவர்கள் திகைக்கிறார்கள்.

தொடர்பற்ற போர்முனை.

போர் நடந்துகொண்டிருக்கும்போது பலவிதச் சிக்கல்களும் மாறுபாடுகளும் தோன்றும். சில சமயங்களில் கடற்கரையிலுள்ள எதிரி பீரங்கிகள் நொறுக்கப்படுகின்றன. மற்றும் சில சமயங்களில், நேசப் படைகள் உள்நாட்டில் போராடிக் கொண்டிருக்கின்றன. நேசநாடுகளின் முன்னணிப் படைகளுக்குப் பின்னேயுள்ள எதிரி கற்கோட்டைகளை நிர்த்தூளியாக்குகின்றனர். அன்றியும் வெகுதூரம் பறந்து சென்று வரும் நேசதேச விமானப் படைகள் இருக்கின்றன. தாக்கவும், தற்காக்கவும் பயன்படும் அசையுந் தீவகங்கள் போல் அவை தோன்றுகின்றன. விஷயம் என்ன வென்றால், இது வரை, தொடர்ச்சியாக எவ்விதப் போர் முனையும் ஏற்படவில்லை.

இப்போது, மிகவும் முக்கியமான ஸ்தானம் செர்பர்க் தீபகற்பந் தான். இந்தப் பகுதியில் நேச நாடுகளின் படைத் தலைவர் ஆதிக்கத்திற்குட்பட்டு, வலதுபுரம் அமெரிக்கப் படைகளும் உள்நாட்டை நெருக்கிக் கொண்டே போயின. நேச நாட்டாரின் படை எடுப்புப் படைகளின் நோக்கங்கள் இன்னவை என்று வெளியிடப் படாதிருக்கும்போது, படையெடுப்பின் ஆரம்பக் கட்டத்தில் கையாண்ட முறைகளையே கையாண்டு கடற்கரைப் போர்த் தளம் அமைத்துக் கொண்ட பிறகுங் கூட அதே முறையைக் கையாளுவது, அவ்வளவு இலகுவான காரியமல்ல. ஆனால், கடற் கரையிலுள்ள முதல் அரணை சிதைத்ததே ஓர் சிறந்த வெற்றி என்று சொல்லலாம். தடைகளை வெல்வதில் நாம் எந்த அளவிற்கு வெற்றி பெற்று முன்னேறி யிருக்கிறோமென்பது தான் முக்கியம். இந்தத் தடைகள் எங்கெங்கிருப்பவை என்பது உடனே வெளியிடப் படக் கூடாததா யிருக்கலாம்.

ஜெர்மன் பிரசார தந்திரம்.

ஒரு விஷயம் இங்கே கவனிக்கத் தக்கது. நேச நாட்டினர் விடுக்கும் அறிக்கைகள் சுருக்கமாகவும் நேர்முகமாகவும் எழுதப்படுகின்றன. அதிகமான நுட்பங்களை நாம் அதில் காண்பதற்கில்லை; ஆனால் ஜெர்மானியர்கள் விடுக்கும் அறிக்கைகளோ நேசப்படைகள் எங்கெங்கிருக்கின்றன போராட்டத்தின் போக்கு எப்படி யிருக்கிறது என்று உலகம் முழுவதுக்கும் அறிவிக்க ஆவலாயிருப்பதாகத் தெரிகிறது. செய்திகளைத் தெரிவிப்பதை விட, செய்திகளைத் தெரிந்து கொள்ளுவதில் தான் ஜெர்மானியர்கள் மிகுந்த அக்கரையோடிருக்கிறார்கள். நேசநாட்டுப் படைகள் எங்கெங்கிருக்கின்றன வென்று தெரிந்து கொள்ள மிகுந்த ஆவலா யிருக்கிறார்கள். பெர்லின் வானொலி நிலையத்தி லிருந்தும் ஜெர்மானியர் ஆதிக்கத்திற்குட்பட்ட பல வானொலி நிலையங்களி லிருந்தும் ஏன் இச்செய்திகளை வெளி யிடுகிறார்க ளென்றால், அச் செய்திகள் தவறு என்று மறுக்கப்பட வேண்டும் அல்லது உண்மை நிலைமையைக் கக்கச் செய்ய வேண்டுமென்பதற்காகத் தான். இந்தத் தகவல்களைக் கொண்டு பயன் படத் தக்க அனுமானங்களை அவர்கள் செய்து கொள்ளலாம். எதிரி வானொலி நிலையங்களின் கூப்பாடுகளைக் கேட்டு விட்டு, நேர்முக மாகவோ, மறைமுக மாகவோ நேச நாட்டினர் எந்த விதத் தகவலும் எதிரிக்குக் கொடுக்கப் போவதில்லை யென்று அவர்கள் விடுக்கும் அறிக்கைகளின் சுருக்கமான தன்மையினின்று விளங்குகிறது. ஜெர்மானியர்கள் தம் அறிக்கைகளைப் பரத்திக் கொண்டே யிருக்கலாம். இவற்றுள் ஒரு சில, ஓரளவிற்கு ஏறக்குறைய உண்மையாக விருப்பது முண்டு. இவற்றைக் கொண்டே, தாம் வெளி யிடும் அறிக்கைகள் எல்லாம் உண்மை யென்று பிறர் நம்ப வேண்டுமென்பது தான் அவர்கள் நோக்கம். ஏனென்றால் அந்த அறிக்கைகள் எல்லாம் வேண்டுமென்றே திரித்துக் கற்பிக்கப்பட்டவை.

1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் 1-ம் தேதி பேர்லின் சர்வ கலாசாலையில் செய்ததோர் பிரசங்கத்தில், ஐரோப்பியப் போரின் முதற் கட்டத்தில் ஜெர்மன் பிரசார ஸ்தாபனம் மேற்கொண்ட பங்கைக் குறித்து, டாக்டர் கொய்பல்ஸ் குறிப்பிட்டது இங்கே கவனிக்கத் தக்கது. அந்தப் பிரசங்கத்தில் "தந்திரமான முறையில் செய்திகளை வெளி யிடுவதனால், எதிரிகளை வெல்லலாம்" என்று கூறியிருக்கிறார். இந்த மொழி கேவலத்திற்கிடமானதாயிருக்கிறது. இந்த நாஜிக் கொள்கையை ஜெர்மன் பிரசாரத் துறையில் அளவுக்கு மீறிக் கையாண்டிருக்கிறார்கள். குறிப்பாக "கமாண்டோ" தாக்குதல்களைக் குறித்தும், இதற்கு முன்பு ஐரோப்பாவில் நேச நாட்டுப் படைகள் போய் இறங்கியது பற்றியுந் தான் வெகுவாகக் கையாண்டார்கள். சென்ற 4 ஆண்டுகளாக, நேச நாட்டுப் படைகள் சிறுசிறு கூட்டங்களாகப் போய் இறங்கியதாக அச் செய்திகள் ஒரு போதும் கூறியதே கிடையாது. ஏனென்றால், இந்தப் படை யெடுப்புக்களின் நோக்கம் இன்னதென்றே எதிரி தெரிந்து கொள்ளாதிருக்கும் போதே, அவை வெற்றி பெற்று விடுகின்றன. ஆகையினால் தான் வாய் திறவாது நேசப் படைத் தலைவர்கள் வேலை செய்து கொண்டு வருகின்றனர். நசேர், டியெப்பி முதலிய இடங்களில் நேசப்படைகள் போய் இறங்கியது பற்றி, தெளிவான பிரிட்டிஷ் அறிக்கைகள் வெளிவருவதற்குத் தாமதமானதைத் தமக்குச் சாதகமாகக் கொண்டு, டாக்டர் கொப்பல்ஸ், தாம் ஏதேதோ சாதித்து விட்டதாகக் கூறினார். செண்ட் நசேரில் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது 1942-ம் வருஷம் மார்ச்சு மாதம் 28-ம் தேதி ஒரு விசேஷ ஜெர்மன் அறிக்கை வெளி வந்தது. அதில், அங்கே வந்திறங்கிய நேசப் படைகள் வளைத்துக் கொள்ளப்பட்டு நாசஞ் செய்யப்பட்டனர் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. 1942-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 19-ம் தேதி டியெப்பியைத் தாக்கிய போது, பி.பி.சி. வானொலி மூலம் அது ஒரு தாக்குதலே யொழிய, படை யெடுப்பு அல்ல வென்றும் பிரஞ்சு மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் ஜெர்மன் அரசாங்க அறிக்கை இதை ஒரு தருணமாகக் கொண்டு, "ஐரோப்பா மீது படையெடுக்க முயற்சித்த பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் படு தோல்வி யடைந்தன" என்று திரித்துக் கூறுகிறது. இவ்வாறாக, டாக்டர் கொய்பல்ஸ் வேண்டுமென்றே கையாண்ட தந்திரங்கள் பல உண்டு. வாசகர்கள் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பிரஞ்சுக் கரையின் பிற பகுதிகளில் நேச நாட்டுப் படைகள் வந்திறங்கியதாகவும், அவற்றைத் தாம் விரட்டி யடித்து விட்டதாகவும் ஜெர்மானியர்கள் அறிவிக்கக் கூடும். இப்படிப்பட்ட பொய்ச் செய்தியை வாசகர்கள் நம்பக் கூடாது.

உலக சமாதானத்திற்கு நேச நாடுகள் முயற்சி

எல்லா நாடுகளுக்கும் நான்கு வகைச் சுதந்தரங்கள்

கோர யுத்தம் இனிக் கூடாது

சர் பி. டி. ராஜன் அவர்கள், பார்.-அட்-லா,
(தேசியப் போர் முனையின் தமிழ் நாட்டுத் தலைவர்.)

இன்று ஐக்கிய நாடுகளின் தினம். ஐக்கிய நாடுகள் 35 இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், ஐக்கிய அமெரிக்கா, ருஷ்யா, சீன தேசம். இவைகளின் பொது நோக்கங்களையும், லக்ஷியங்களையும் சற்று கவனிப்போம். யுத்தம் சம்பந்தப்பட்ட மட்டில் சர்வாதிகாரத்தை அழித்து, நாஜிஸத்தையும் பாசிசத்தையும் அடியோடு ஒழித்தல் என்பதே இவர்களின் முக்கிய நோக்கம். ஏனென்றால் நாஜி ஜெர்மானியரும் அவர்களின் மனப்பான்மையைக் கொண்ட ஜப்பானியர்களும் ஜாதித் திமிறை அடிப்படையாகக் கொண்டு இதர தேச மக்களை அடிமையாக்கி உலகத்தைத் தாங்களே ஆளவேண்டும் என்ற பேராசையுடன் யுத்தத்தை ஆரம்பித்தார்கள். இந்த யுத்தத்தில் நேசக் கக்ஷியார் தங்கள் சுயநலத்தைக் கருதி சண்டை செய்கிறார்கள் என்று யாராவது நினைத்தால், அது தவறாகும். உலக மக்கள் அனைவருக்கும் நான்கு வகையான சுதந்தரங்களை அளிக்க வேண்டுமென்பதே ஐக்கிய நாடுகளின் லக்ஷியம் என்பதை ஜனாதிபதி ரூஸ்வெல்டு வெகு தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

சர் பி. டி. ராஜன், பார்.-அட்-லா.

நான்கு சுதந்தரங்கள்

அந்த நான்கு சுதந்தரங்களாவன :—

1. பேச்சு சுதந்தரம்.
2. மத சுதந்தரம்.
3. வலியோரின் தாக்குதலினின்றும் பயமில்லாத வாழ்க்கை.
4. வறுமையில்லாத வாழ்க்கை.

இவைகளை விவரித்துச் சொல்ல வேண்டுமானால் முதலாவது ஒவ்வொரு தேசத்திலுள்ள மக்களும் தங்கள் சொந்த அபிப்பிராயத்தை யாருக்கும் பயப்படாமல் பகிரங்கமாய்ச் சொல்ல உரிமையிருக்க வேண்டும். இரண்டாவதாக எல்லா தேச மக்களும் அவர் அவர் இஷ்டப்படி எந்த மதத்தையும் அனுஷ்டிக்கலாம். ஏனென்றால் அரசாங்கத்திற்கும் மதத்திற்கும் ஒருவித சம்பந்தமும் கிடையாது. எந்த அரசாங்கமும் குறிப்பிட்ட எந்த மதத்தையும் அனுஷ்டிக்கும்படி தன் பிரஜைகளைக் கட்டாயப் படுத்தக் கூடாது. இதுதான் மத சுதந்திரம் என்பது. மூன்றாவது எவ்வளவு சிறிய நாட்டையும் பலமுடைய மற்ற நாடுகள் எந்த விதத்திலும் எதிர்த்துத் தாக்குதல் செய்ய முடியாதபடி செய்தல். நான்காவது ஒவ்வொரு நாட்டிலுமுள்ள எல்லா மக்களும் தங்கள் வாழ்க்கைக்கு அவசியமான உணவுக்கோ, உடைக்கோ கஷ்டப்படலாகாது. இதை ஒட்டியே அட்லாண்டிக் சாசனம் வெளியிடப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் லட்சியம்

இதன் மூலமாக அச்சு நாடுகளின் அக்கிரமமான ஆக்ரமிப்பால் அவதிப்படும் எல்லா நாடுகளையும் விடுதலை செய்து, அவைகளுக்குப் பூரண சுதந்தரம் அளித்தல் ஐக்கிய நாடுகளின் லக்ஷியம் என்பது தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது. இந்த சாசனம் அச்சு நாடுகளின் ஆக்ரமிப்புக்கு உட்படாத நாடுகள் விஷயத்திலும் அனுஷ்டிக்கப்படுமா என்ற ஒரு பிரச்னை கிளம்பியது. இந்த பூர்ண சுதந்தரம் சகல மக்களுக்கும் உரியது என்று ஜனாதிபதி ரூஸ்வெல்டு அறிக்கை செய்துள்ளார்.

இந்த லக்ஷியங்களை யுத்த காலத்திலேயே ஐக்கிய நாடுகள் எவ்வளவு தூரம் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை ஒரு சிறிது கவனிப்போம். ஆப்பிரிக்காவில் இத்தாலியர் அக்ரமமாகக் கைப்பற்றிய அபிசீனிய தேசத்தை நேசக் கக்ஷியார் இத்தாலியினிடமிருந்து கைப்பற்றிய உடனே அபிசீனிய மக்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். அம்மக்கள் விருப்பப்படியே அவர்களின் சக்கரவர்த்தி ஹெய்லே செலாஸியும் சிம்மாசனம் ஏறினார். எகிப்திய தேசத்தார் மீது நாசிக் கக்ஷியினர் படையெடுத்து அந்நாட்டை ஆக்ரமித்து விடுவார்களோ என்று தோன்றினபோதிலும், அவர்கள் நாஜியர்களை எதிர்த்துப் போராடவில்லை. என்றாலும் எகிப்தியரின் சுதந்திரத்தை காப்பாற்றுவதற்காக, நேச தேசங்கள், அவர்களிடமிருந்து எவ்வித ஆள் உதவியோ, பொருள் உதவியோ எதிர்பாராது, நாஜியர்களுடன் பலமாகப் போரிட்டு வட ஆப்பிரிக்காவினின்றும் அவர்களைத் துரத்தி அடித்தார்கள். இவ்வாறு எகிப்தின் சுதந்திரத்திற்கு எவ்வித ஆபத்தும் வராதபடி நேச தேசங்கள் காப்பாற்றின. பிரஞ்சுக்காரர்களின் மேற்பார்வையிலிருந்த சிரியா, லெபனன் முதலிய நாடுகளில் மக்கள் பூர்ண சுதந்திரத்தைக் கோரி கிளர்ச்சி செய்தனர். பிரஞ்சு அதிகார வர்க்கத்தினருக்கும் அந்நாட்டு மக்களுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. நேசநாட்டு ராஜதந்திரிகள் இரு தரத்தாரையும் சமாதானப்படுத்தி, யுத்த முடிவில் அந்நாட்டு மக்களுக்கு பூரண சுதந்தரம் கிடைக்குமென்று உறுதி கூறினார்கள். அந்நாட்டு மக்களும் திருப்தி அடைந்தனர்.

ஹாங்காங்கில் பிற நாட்டினர் உரிமைகள்

சீன தேசத்தில் ஹாங்காங் தீவில் யுத்தத்துக்கு முன்பாக, அநேக அந்நிய நாட்டார்களுக்கு விசேஷ உரிமைகளும் சலுகைகளும் இருந்தன. குறிப்பாக, அந்நிய

நாட்டினர் ஹாங்காங்கின் ஸ்தல நீதி நிர்வாகத்துக்கு உட்படாதிருந்தனர். ஒவ்வொரு அந்நிய நாட்டாரும் தங்கள் தங்கள் தேசத்தவர் அடங்கிய நியாய சபைகளாலேயே விசாரிக்கப்படவேண்டும் என்ற சம்பிரதாயம் இருந்து வந்தது. இது சீன அரசாங்கத்தின் அந்தஸ்திற்கு மிகவும் ஹீனமாயிருந்தது. சமீபத்தில் நேசநாடுகள் ஒவ்வொன்றும் சீன தேசத்தில் தாங்கள் அனுபவித்து வந்த விசேஷ உரிமைகளையும் சலுகைகளையும் விட்டுக் கொடுத்துவிட்டன. சீனா தேசத்து மக்களுக்குள்ள நீதி நிர்வாக உரிமைகளும் கடமைகளும் தங்களுக்கும் உரியவை என்று இசைந்துள்ளார்கள். இதன் மூலம் சீன அரசாங்கத்தின் தனிப்பட்ட ஆதிக்கத்தை ஐக்கிய நாடுகள் அங்கீகரித்திருக்கின்றன. பிலிப்பைன் தீவுகளுக்கு 1946-ம் வருஷத்தில் பூரண சுதந்திரம் வழங்குவதாக அமெரிக்க மக்களின் சார்பாக ஜனாதிபதி ரூஸ்வெல்டு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

பூரண வெற்றி அவசியம்

இந்த லக்ஷியங்களை அனுஷ்டானத்துக்கு கொண்டுவர வேண்டுமானால் ஐக்கிய நாடுகளுக்கு பூரண வெற்றி அத்தியாவசியம். எதிரிகளோ சாதாரண மக்கள் அல்ல. யுத்தம் செய்வதே அவர்களின் பரம்பரைத் தொழிலாகும். இந்தச் சண்டை ஆரம்பிப்பதற்கு வெகு காலத்துக்கு முன்னமேயே, எதிரிகள் யுத்தத் தளவாடங்களை ரகசியமாகத் தயாரித்து வந்தார்கள். தாங்கள் யுத்தம் ஆரம்பித்திருப்பதாக அறிக்கை செய்யாமலே அநேக நாடுகளை அவர்கள் கைப்பற்றினார்கள். அந்த நாடுகளை எதிரிகளின் ஆதிக்கத்தினின்றும் மீட்பதற்கு ஐக்கிய நாடுகளுக்குள் பரஸ்பர நல்லெண்ணமும் நம்பிக்கையும் அவசியமாயிருந்தது. ஐக்கிய நாடுகளெல்லாம் தங்கள் யுத்த சாதனங்களையும் சக்திகளையும் ஒருங்கு திரட்டி ஒரு பொது நோக்கத்துடன் எதிரிகளுடன் போராடினால்தான் வெற்றி கிடைக்கும் என்று உணர்ந்து அதற்குத் தகுந்தாற் போல, தங்கள் யுத்த முறைகளை அமைத்தார்கள். ருஷ்யர்கள் ஜெர்மானியரைத் தீவிரமாகத் தாக்கி போர் புரிந்துகொண்டிருந்த சமயம், நேசதேசங்கள் ஏராளமான ஆகாய விமானங்களையும் கவச மோட்டார்களையும், நவீன யுத்த சாதனங்களையும் ரஷ்யர்களுக்கு அனுப்பி உதவி செய்தனர். அதேமாதிரி, சைனாவிற்கும் யுத்தத் தளவாடங்களை, எவ்வளவோ போக்குவரத்து வசதிக் குறைவையும் பாராது, அனுப்பி வைத்தனர். பசிபிக் தீரத்தில் ஜெனரல் மெக்ஆர்தரின் தலைமையின்கீழ் ஜப்பானியர்களை அவர்கள் கைப்பற்றியிருந்த அநேகம் தீவுகளிலிருந்தும் துரத்தினார்கள்.

நேச நாடுகளின் இராணுவ தந்திரம்

முதலில் ஜெர்மனியை முறியடித்து பின்பு ஜப்பானை ஒருமுகமாகத் தாக்க வேண்டும் என்பது நேசநாடுகளின் ராணுவ தந்திரம். இதை அனுசரித்தே வட ஆப்பிரிக்காவிலிருந்த ஜெர்மானியர்களை பிரிட்டிஷ் இந்தியத் துருப்புக்கள் டூனீஷியாவை நோக்கி ஓடும்படி துரத்தினர். ஐக்கிய அமெரிக்கத் துருப்புகள் மேற்கு ஆப்பிரிக்காவில் ரகசியமாகவும் விசேஷ முன் ஜாக்கிரதையுடனும் இறங்கி அங்கிருந்த ஜெர்மானியரை விரட்டினார்கள். வடக்கிலிருந்து வந்த பிரிட்டிஷ் இந்தியத் துருப்புகளும் மேற்கில் இருந்து வந்த அமெரிக்க துருப்புகளும் டூனீஷியாவில் சந்தித்து ஜெர்மானியரை பலத்த சேதத்துடன் அந்த நாட்டினின்றும் ஓடும்படி செய்தனர். இவ்வாறாக ஜெர்மானியர்கள் ஏராளமான சேதத்துடனும், தங்கள் துருப்புகளில் பெரும் பாகத்தைச் சரண் அடையும்படி செய்தும், ஆப்பிரிக்காவிலிருந்து முற்றிலும் வெளியேறும்படி நேர்ந்தது. பின்பு சிசிலி தீவைப் பிடித்து, மத்திய தரைக் கடலில் அச்சுக் கக்ஷியாரின் ஆதிக்கத்தை நேச நாட்டினர் ஒழித்தார்கள். அடுத்தபடியாக இத்தாலிக்குள் நேசநாட்டினர் பிரவேசிப்பதற்கு முன்னாலேயே முஸோலினி தன் அதிகாரத்தைத் துறந்து ஜெர்மானியரிடம் தஞ்சம் புக ஓடினார். நேச நாடுகள் இத்தாலிக்குள் பிரவேசித்தன. ஜெர்மானியர் இத்தாலி தேசத்தையே யுத்த தளமாக்கி நேசக்கக்ஷியினரை எதிர்த்து தங்கள் முழுபலத்தையும் பிரயோகித்துப் போரிட்டனர். ஆனால் அவர்களால் நேசத்துருப்புகளின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. இறுதியில் ரோம் நகரைக் காலி செய்துவிட்டு இன்று ஜெர்மானியர் பின் வாங்கி வடக்கு நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். தங்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஜெர்மானியரை சின்னாப் பின்னமாய் பின் வாங்கும்படி, ரஷிய மக்கள் செய்து விட்டனர். வெகு நாட்களாக ஐக்கிய நாட்டு மக்கள் எதிர்பார்த்திருந்த இரண்டாம் போர்முனை சமீபத்தில் பிரான்சின் மேற்கு பாகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக ஜெர்மனியை பல திசைகளிலிருந்தும் தாக்கி நாசியர்களை முற்றிலும் முறியடிக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

பர்மாவை மீட்க வேண்டும்

ஜப்பானுடன் பிரம்மாண்டமான இறுதிப்போர் ஆரம்பிக்கப்படுவதற்குமுன், பர்மாவை ஜப்பானியரிடமிருந்து மீட்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஏனெனில், இந்தியாவிற்கு அத்தியாவசியமாக வேண்டப்படும் உணவுப் பொருள்களை இங்கே இறக்குமதியாக்க சௌகரியப்படும். அதுவுமன்றி, பர்மா ரோடு என்று அழைக்கப்படும் சீனத்து ராஜபாட்டை நேசநாடுகள் வசம் வந்தால்தான், சென்ற எட்டு வருஷ காலங்களுக்குமேல் ஜப்பானியர்களுடன் போர்புரிந்து தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றி வரும் சீன மக்களுக்குத் தங்குதடை இல்லாது தளவாடங்களையும் உணவுப் பொருள்களையும் அனுப்பி உதவ முடியும். இவ்வளவு முக்கியமாக இருக்கும் பர்மாவை சீக்கிரம் மீட்பதற்காகத்தான் லார்ட் லூயி மௌண்ட்பேட்டன் தலைமையின் கீழ் தென்கிழக்கு ஆசியா போர் முனை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஜெர்மானியர் ஆதிக்கத்தை ஐரோப்பாவில் முற்றிலும் ஒழித்து; அதன்பின் நேசநாடுகள் எல்லாம் தஙகள் முழு பலத்துடன், சீனக் கடற்கரையிலிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும், பஸிபிக் தீவுகளிலிருந்தும், கடல மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் ஜப்பானைத் தாக்குவார்கள். ஜப்பானியரின் ராணுவத திமிரும், ஜாதி இறுமாப்பும் முற்றிலும் ஒழிந்தவுடன் யுத்தம் முடிவடையும் என்று நாம எதிர்பார்க்கலாம்.

கோர யுத்தம் இனிக் கூடாது

பூரண வெற்றி அடைந்தபின் இப்படிப்பட்ட கோர யுத்தம் வெகு காலத்துக்கு மறுபடியும் உலகத்தில் சம்பவிக்காமல் இருக்கும்படி செய்வதே நேசநாடுகளின் லக்ஷியமாகும். ஏனென்றால், அவர்களின் எண்ணப்படி உலகத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமானால், நீண்டநாளைக்கு சமாதானம் நீடித்திருக்க வேண்டும். எத்தனையோ கோடிமக்களின் உயிரையும், பல கோடிக் கணக்கான பொருள்களையும் பலிவாங்கும் கோர யுத்தம் மறுபடியும் நிகழ்ந்தால், உலக சீரமைப்புக்கு வேண்டிய சமாதானம் நிலவாது. இதை தழுவித்தான் "அச்சு நாடுகளை அடியோடு ஒழிப்பதாக இல்லை; ஆனால் ஜெர்மானியின் நாசி கக்ஷியையும் ஜப்பானிய ராணுவக்கக்ஷியையும், அடியோடு ஒழித்து அந்த நாட்டு மக்களுக்கும், இதர நாட்டு மக்களின் சௌகரியமான வாழ்க்கைக்கு என்ன ஏற்பாடுகள் செய்யப் போகின்றோமோ, அவைகளை அவர்களுக்கும் அளிப்போம் என்று ஐக்கிய நாட்டுத் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள்.

யுத்தக் காரணங்கள் ஒழிய வேண்டும்

அதுவுமல்லாமல், யுத்தத்திற்கே அடிப்படையான காரணங்களையும் ஒழிக்க வேண்டும் என்றும் அந்தத் தலைவர்கள் கூறியுள்ளார்கள். சில நாடுகளில் ஜனத்தொகை பெருகியிருப்பதால் அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் எல்லாம், அந்த நாடுகளில் கிடைப்பதில்லை. ஆதலால், இதர நாடுகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற பேராசை அவர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. அதன் காரணமாக வியாபாரப் போட்டிகளும் ராணுவப் பெருக்கமும் ஏற்பட்டு விடுகின்றன. யுத்தத்திற்குப் பின் ஒவ்வொரு நாடும் தன்தன் இஷ்டப்படி தன் அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள சுதந்திரமுள்ளதாக இருக்க வேண்டும். அத்துடன் எல்லா தேசங்களுக்கும் உலகத்தின் சகல பகுதிகளிலும் உள்ள மூலப்பொருள்கள் போட்டியின்றிக் கிடைக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று ஐக்கிய நாட்டுத் தலைவர்கள் அறிக்கை செய்திருக்கிறார்கள். மூலப் பொருள்களை விநியோகிப்பதில் ஏக போக உரிமைகளை ஒழித்து விடுவதால், வியாபாரப் போட்டியும், அதனால் உண்டாகும் அநேக சச்சரவுகளும் இல்லாது ஒழியும். ஒவ்வொரு நாட்டிற்கும், கடல் மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும், மற்ற எந்த நாட்டினு

(10-ம் பக்கம் பார்க்க)

துனீசிய வெற்றிக்குப் பின் அச்சுநாடுகளின் வீழ்ச்சி

ரஷ்யப் படையினரின் அரும் பெருஞ் செயல்கள்

கோவை மிஸ்டர் ஜி. டி, நாயுடு

துனீசியா என்றுலே உள்ளத்தில் ஓர் எழுச்சி உண்டாகின்றது. வீரம் கொழுந்து விட்டு எரிகின்றது. இங்கு தான் ஓர் ஆண்டிற்கு முன்பு நம் இந்தியர்களும் பிரிட்டிஷாரும் அமெரிக்கரும், நியூஜீலெண்டாரும் பிரஞ்சுக்காரரும் சேர்ந்துள்ள நம் படையினர் அச்சு நாட்டுப்படைகளைப் பழிக்குப் பழி வாங்கி முறியடித்து பெரிய வெற்றிக் கொடி நாட்டினுர்கள். இந்த வெற்றி ஜெர்மன் தளகர்த்தர் ரோமலை ஐரோப்பாவுக்கு விரட்டியடித்து, மற்றெருரு தளகர்த்தரான ஆர்னிமை (Arnim) சிறைப்படுத்தி, 175,000 அச்சு நாட்டுப் படையினரை கைதி யாக்கியது. இத்தாலியரும், ஜெர்மானியரும், கனவு கண்ட ஆப்பிரிக்க சாம்ராஜ்யத்திற்குச் சவக் குழி தோண்டிற்று. அம்மட்டோ. அப் பெரிய வெற்றியால் எதிரிகள் வசம் இருந்த மத்தியதரைக் கடல் நம் வசம் வந்தது. வந்ததால் நியூயார்க்கி லிருந்தும் லண்டனி லிருந்தும் இந்தியத் துறைமுகங்களுக்குச் செல்லும் கப்பல்களின் தூரத்தில் 7,200 மைல் குறைவு ஏற்பட்டது. மற்றும் இந்த வெற்றிக்குப் பின்பே, நேச நாட்டார்கள் தான் இம்மகா யுத்தத்தில் ஜெயிப்பார்கள் என்ற நம்பிக்கை, அச்சு நாட்டாருள்பட எல்லோருக்கும் உண்டாயிற்று. அதனுற்றுன் இவ் வெற்றி சுதந்தரத்தை விரும்பும் மக்களிடை ஒரு மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. இவ் வெற்றிக்கு அடிப்படையாய் இருந்து நாஜி தளகர்த்தரான ஆர்னிமைக்கைது செய்த இந்திய வீரர்களையும் மற்றுமுள்ள பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகளையும் யாரும் என்றும் மறக்க முடியாது.

முதல் வெடி

மேலும் இந்த டுனீசியா வெற்றி தான் தகர்க்க முடியாதென்று பெருமை பேசப்பட்ட ஹிட்லரின் ஐரோப்பிய கோட்டைக்கு முதல் ஆட்டத்தைக் கொடுத்த வெடியாகும். இதற்குப் பின்பே நேச நாட்டாருக்கு எல்லா அரங்கங்களிலும் தரையிலும் கடலிலும் வானிலும் பாதாலத்திலும் இடையருத வெற்றிகள் கிடைத்துக் கொண்டு வருகின்றன, சுருங்கச் சொல்வோமாயின் டுனீசியா வெற்றி உயர் திரு சர்ச்சில் சொல்லியது போல் ஆரம்ப வெற்றியாகும்.

பல யுத்த நிகழ்ச்சிகள்

இந்த மாபெரும் வெற்றியின் முதல் ஆண்டு நிறைவு விழா இன்றுகும். எனவே இந்த ஓர் ஆண்டில் பல யுத்த அரங்கங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் என்னவெனப் பார்ப்போம்.

ஒரு பெரிய வெற்றி ஏற்பட்டவுடன் மற்றெருரு வெற்றி பெறுதற்கு—போர் துவக்கப் பல ஏற்பாடுகளாதல் வேண்டும். அதற்காக சிறிது நாட்கள் யுத்த அரங்கங்



கோவை மிஸ்டர் ஜி. டி. நாயுடு

கள் மந்தமாய் இருப்பது போல் வெளிப் பார்வைக்குத் தெரியும், அம்மாதிரியே ஐரோப்பாக் கண்டத்தை இத்தாலியின் வழியாய்க் கைப்பற்ற சில முன்னேற்பாடுகள் செய்யப்பட்ட பின் 1943 ஜூலை 10-ல் ஐசன்ஹோவர் தலைமையில் சிசிலித் தீவின் தெற்குக் கரையின் நேசத் துருப்புகள் பல இடங்களில் இறங்கி வெகு வேகமாய் முன்னேறின. இவ்வேக முன்னேற்றம்—முசோலினியின் அரசாங்கத்துக்கு ஆட்டத்தைக் கொடுத்தது. இதன் விளைவாய் 21 ஆண்டுகள் தொடர்ந்து அதிகாரத்தில் இருந்து அட்டகாசம் செய்த முசோலினியின் பாசிஸட் ஆட்சி திடீரென்று ஜூலை 25-ல் கண்ணீர் விட்டு அழுவார் யாருமின்றி முறிந்து விழுந்தது. முசோலினியும் சிறைப்படுத்தப் பட்டார், தளகர்த்தர் படோக்ளியின் தலைமையின் கீழ் மற்றெரு அரசாங்கம் அரசர் விக்டர் எமானுவால் நிறுவப்பட்டது. முசோலினி ஒழிந்துங் கூட, இவ் வரசாங்கம் நமக்கு எதிரிடையாய்ப் போரிடப் போவதாய் அறிவித்தது. சிசிலித் தீவை 38 நாட்களுள் நம் படைகள் பிடித்து இத்தாலியைக் கைப்பற்றுதற்காக செப்டம்பர் 3-ம் தேதி அங்கு இறங்கின. அன்று தான் இந்த மகா யுத்தத்தின் ஐந்தாமாண்டு ஆரம்பமான நாளாகும். படோக்ளியோ அரசாங்கத்தால் நமக்கு எதிரிடையாய்ப் போரிடமுடியவில்லை.

இத்தாலியின் சரணுகதி

எனவே செப்டெம்பர் மாதம் 8-ந் தேதி இப்புதிய இத்தாலிய அரசாங்கம் யாதொரு நிபந்தனையு மின்றி சரணடைந்தது. இதற் கிடையில் முசோலினி எப்படியோ சிறையிலிருந்து ஹிட்லர் ஆட்களால் மீட்கப் பட்டார். மீட்கப்பட்ட முசோலினி வட இத்தாலியின் வேறு ஒரு பாசிஸ்ட் அரசாங்கத்தை நிறுவினுர். எனவே, வட இத்தாலியில் ஹிட்லரின் பொம்மை அரசாங்கமும் தென் இத்தாலியில் நேச நாட்டாரால் தற்காலிகமாய் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் இத்தாலிய ஜனங்களின் அரசாங்கமும் இருந்து வருகின்றன. இத்தாலிய அரசாங்கம் சரண் அடைந்ததால் ஹிட்லருக்கு ஆதரவாய் இருந்த 1,500,000 ஆட்களையுடைய இத்தாலியப் படை சிர் குலைந்தது. ஐரோப்பாவில் இரண்டாவது என்று கருதப்பட்ட இத்தாலிய கப்பற் படை நூறு சண்டைக் கப்பல்களுக்கு மேல் நேசக் கட்சியாருடன் சேர்ந்தன. அதற்கு மேல் அக்டோபர் 13-ல் இத்தாலிமீது புது அரசாங்கம் ஜெர்மனியுடன் போர் தொடுப்பதாய் அறிவித்தது. இத்தாலி மீது படையெடுத்த நேசப் படைகளான ஐந்தாம் படை கிழக்குக் கரை வழியாயும், எட்டாம் படை மேற்குக் கரை வழியாயும், நாசி எதிர்ப்பைப் பொசுக்கி முன்னேறின. நேப்பில்ஸ் அக்டோபர் 1-ல் பிடிபட்டது. அக்டோபர் முதல் வாரத்தில் நம் படைகள் ரோமுக்கு 100 மைலுக்குள் வந்து விட்டன. வரவும், ரோமிலிருந்த முசோலினி அரசாங்கம், மேலும் மேலும் வடக்கே மிலானுக்கு (Mi.an) ஓடிவிட்டது. இப்பொழுது ரோமாபுரிக்காக மிகப் பெரிய போர், தளகர்த்தர் அலக்ஸாண்டர் தலைமையில் ஆரம்பமாய் இருக்கின்றது. காசினேவுக்குப் பக்கத்தில் கஸ்டாவ் அரண்களைத் துளைத்து எட்டாம் படையும் ஐந்தாம் படையும் பிரமாண்டமான போர் நடத்தி வருகின்றது. எதிர்ப்பும் தாங்க முடியாது, ஜெர்மன் படைகள் ஹிட்லர் ஆணுக்குப் பின்வாங்குகின்றன. இத் தாக்குதல் நாசிகளை தெற்கிலிருந்து அடியோடு அழிக்கும் இறுதிப் போராட்டத்தின்

முதல் தாக்குதலாகும் என்று அமெரிக்க வட்டாரங்களில் சொல்லப் படுகின்றது. இப்பொழுது நம் படைகள் ரோமாபுரிக்கு 75 மைலில் இருக்கின்றன.

செஞ் சேனைகளின் வீரம்

இனி ரஷ்ய அரங்கத்தை எடுத்துக் கொள்வோம். செஞ் சேனைகளின் செயற்கரிய வீரச் செயல்களை என்ன வென்று சொல்வது? அவை :3 வாரங்கள் சலிப்பின்றி ஊண் உறக்கமின்றி போரிட்டு ஸ்டாலின்கிராடில் ஜெர்மன் படைகளை முறியடித்த பின், ஜெர்மன் படைகள் பின்வாங்கிக் கொண்டே வருகின்றன. சென்ற ஆண்டில் ஜூலை 5-க்கு மேல் நடந்த போர் ஆரம்பத்திலிருந்து செஞ் சேனை ஒரெல், பெல்கோராட், கார்கவ், சுமால்ன்ஸ்க் முதலிய நகரங்களைக் கைப்பற்றிச் சென்ற அக்டோபர் நவம்பரில் நீப்பர் நதியைத் தாண்டிற்று. சென்ற ஆண்டில் நடந்த போரில் ஜெர்மானியர் 40 லட்சம் பேர்களை இழந்தனர். அவர்களுள் 18 லட்சம் பேர் கொல்லப்பட்டனர். மற்றும் அவர்கள் 14,000 ஆகாய விமானங்களையும் 25,000 டாங்குகளையும் இழந்தனர். இதனுல் ஹிட்லர் படை மெலிந்து, சண்டை செய்வது போய், தற்பாதுகாப்பை மேற்கொண்டது. 1943-ம் வருடச் சண்டையில் ரஷ்யர் தாம் இழந்த பிரதேசத்தில் 300,000 சதுர மைல் பரப்பை மீட்டனர். இனி இவ்வாண்டில் செம் படையினர் வெகு தூரம் முன்னேறி யிருக்கின்றனர். அவர்கள் ஒரு புடை ருமேனியாவிற்குள்ளும், மற்ருெரு புடை கார்ப்பேதியன் மலைப் பிரதேசங்களுள்ளும்—வடக்கே எஸ்தோனியா, லிதுவேனியாவுள்ளும் பாய்ந்திருக்கின்றுர்கள். சமீபத்தில் ஒடேசா, செபாஸ்டோபல் முதலிய துறைமுகங்களைக் கைப்பற்றி, கிரீமியா தீபகல்பத்தினின்றும் ஜெர்மானியரை விரட்டி யடித்திருக்கின்றுர்கள். செபாஸ்டோபல் வீழ்ச்சி ஓர் ரஷ்ய நிபுணர் கூறுவது போல, பெர்லின் நாசத்திற்கு பால்கன் வழியாய்ச் செல்லும் ஒரு பாதையாகும். மேநாளன்று தளகர்த்தர் ஸ்டாலின் சொன்னதிலிருந்து இதுவரை ரஷ்யர் தாம் இழந்த பிரதேசத்தில் முக்கால் பகுதிக்கு மேல் மீட்டிருக்கின்றுர்கள்.

இரண்டாம் போர் முனைக்கு ஆயத்தங்கள்

யானை வருகின்றது பின்னுல்—மணி ஓசை வருகின்றது முன்னுல் என்பது போல், இரண்டாம் போர் முனை படையெடுப்பைத் தெரிவிக்கு முகத்தான் நம் ஆகாய விமானங்கள் கூட்டங் கூட்டமாய் நாடோறும் இரவென்றும் பகலென்றும் பாராமல் ஜெர்மனியிலும் ஜெர்மானியர் வசமுள்ள ஐரோப்பிய நாடுகளிலும் பறந்து வட்டாரமிட்டு—போரிட்டு—பல ஆயிரக் கணக்கான டன்கள் வெடி குண்டுகள் எறிந்து நாசிகளின் இராணுவ பலம் உற்பத்தி பலம் முதலியவைகளை நாசமாக்கி வருகின்றன. இவ் விமானங்கள் சென்ற 150 ஆண்டுகளாய் சண்டை என்பது இன்னது—அதனுல் என்ன நாசங்கள் விளைகின்றன என்பதை நேரில் பார்த்து அறியாத ஜெர்மனி நாட்டில் அறியச் செய்து அம்மக்களின் மன உறுதியைக் குலைத்து வருகின்றது. யுத்தத் தளவாடங்கள் செய்யப்படும் பெர்லின், ஹாம்பர்க், கொலோன், டஸல்டார்ப், எஸ்ஸன், ப்ராங்க்பர்ட் முதலிய பல நகரங்களில் இராணுவ இலக்குகள் ஆகாய விமான தளங்கள் தொழிற்சாலைகள் நாசமாகின்றன. 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் முதல் தேதியிலிருந்து டிசம்பர் மாதம் 31-ம் தேதி முடிய, 3 லட்சம் டன் வெடி குண்டுகள் எறியப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் ஆகாய விமானப் படை பலத்தில் முன்னணியிலுள்ள தென்று கருதப்பட்ட ஜெர்மனியின் "லுப்ட்வால்ப்" என்கிற ஆகாயப் படையினுல், இவ்விமானப் படையெடுப்பைத் தடுக்க முடியவில்லை.

ஜெர்மனி மீது தாக்குதல் விவரம்

ஜெர்மனியில் இரண்டாவது பெரிய நகரம் என்று சொல்லப்படும் 18 லட்சம் ஜனத் தொகையுடைய ஹாம்பர்க் என்ற உலகப் பிரசித்தி பெற்ற ஜெர்மன் துறைமுகம் செத்துத் தரைமட்டமாய் விட்டது. இனிமேல் இந்தப் பேருள்ள நகரமே யில்லை. பெர்லினிலிருந்த ஹிட்லர் அரசாங்கம் இந்த விமானங்களுக்குப் பயந்து வேறு ஓர் இடத்திற்கு ஓடிவிட்டதாய்க் கூறப்படுகின்றது. மற்றும் பெர்லின் நகரம் உலகத்திலேயே 4-வது பெரிய நகர். அது முக்கால் பாகத்திற்கு மேல் அழிந்து விட்டதாகச் சொல்லப்படுகின்றது. பெர்லினில் மட்டும் நவம்பர் மாதம் 18-ம் தேதி 1,500 டன்களும், நவம்பர் மாதம் 22-ம் தேதி 2,300 டன்களும், நவம்பர் மாதம் 23-ம் தேதி 1,400 டன்களும், நவம்பர் மாதம் 26-ம் தேதி 1,000 டன்களும், டிசம்பர் மாதம் 2-ம் தேதி 1,500 டன்களும், டிசம்பர் மாதம் 16-ம் தேதி 1,500 டன்களும், டிசம்பர் மாதம் 24-ம் தேதி 1,000 டன்களும், டிசம்பர் மாதம் 26-ம் தேதி 1,000 டன்களும் டிசம்பர் மாதம் 29-ம் தேதி 2,000 டன்களும் எறியப்பட்டிருக்கின்றன. இனி இவ்வாண்டில் சென்ற ஏப்ரல் மாதம் 27-ம் தேதியில் மட்டும் 5,000 விமானங்கள் இரவும் பகலும் ஐரோப்பாக் கண்டத்தில் எதிரிகளின் பிரதேசத்தில் பெர்லின், கோலோன், எஸ்ஸென் முதலிய பல நகரங்களில் வட்ட மிட்டு 8,000 டன் குண்டுகளை எறிந்திருக்கின்றன. ஏப்ரல் மாதம் 29-ம் தேதியில் பல ஆயிர விமானங்கள் பெர்லினைப் பட்டப் பகலில் தாக்கி யிருக்கின்றன. எந்த பிரிட்டிஷ் விமானமும் பகலில் வடக்குக் கடலைக் கடக்க முடியாதென்று 1940-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 3-ம் தேதியில் ஹிட்லர் பேசிய ஜம்பம் இப்பொழுது என்னவாயிற்று? இத்தாக்கு தல்களையே தங்களுக்கு உதவி செய்யக்கூடிய ஓர் இரண்டாவது போர் முனை என்று ஆறு மாதங்களுக்கு முன்பு, 1943-ம் வருஷம் நவம்பர் மாதம் 8உயில் ஸ்டாலின் கூறியிருக்கின்றுர்.

கடற் போரிலும் நாஜிகளுக்குத் தோல்வி.

இனி டுனிசியாவுக்கு பின்பு சமுத்திரங்களிலும் நாசிகளுக்குப் பெருந் தோல்வி தான். 1943-ம் வருஷத்திலிருந்து மிகப் பிரமாதமாய்ப் பேசப்பட்ட நாஜி "யூ" படகுகளினுல் நம் போக்கு வரத்துக்கு அதிகத் தொல்லைகள் விளைவிக்க முடியவில்லை. இங்கிலாந்திலிருந்து யுத்தத் தளவாடங்களை ஏற்றிக்கொண்டு, நார்வேயைச் சுற்றி ரஷ்யாவுக்குச் செல்லும் கப்பல் கூட்டங்களையும், அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு வரும் கப்பல் கூட்டங்களையும், இந்த "யூ" படகுகள் ஒன்றும் செய்ய முடியவில்லை. காரணம் இவைகளை அழிக்க, நேச நாட்டார் பல மான வேலைகளைக் கையாண்டனர். "யூ" படகுகள் செய்யும் எதிரி இடங்களை நம் ஆகாய விமானங்கள் வெடி குண்டுகள் போட்டு அழத்தன. சமுத்திரத்தில் தொல்லை விளைவிப்பதற்காக விருந்தவைகளைப் படிப்படியாய் மூழ்கடித்தனர். 1943-ம் வருஷத் துவக்கத்தில் நாளொன்றுக்கு 2 வீதம் இப்படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. ஆகஸ்ட்டு, செப்டெம்பர், அக்டோபர் மாதங்களில் மட்டும் 60 படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இப்பொழுதும் ஒவ்வொரு நாளும் மூழ்கடிக்கப் படுகின்றன. மற்றும் அமெரிக்காவும் இங்கிலாந்தும் சேர்ந்து நாளொன்றுக்கு 7 கப்பல்கள் கட்ட முடிகின்றமையால் "யூ" படகுகளைப் பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமேயில்லை. ஆனுல் இப்பொழுது கடலில் கவலைப்பட வேண்டியவர்கள் நம் எதிரிகளே. அவர்கள் கப்பல் கூட்டங்கள் தான் தாக்கப்படுகின்றன. நாஜிகளின் அழிக்க முடியாத கடல்கோட்டை என்னும் 26,000 டன்னுள்ள 'ஸ்கார்ன்ஹார்ஸ்ட்' என்ற யுத்தக் கப்பலையும் அதிலுள்ள 1,500 பேரையும் மூழ்கடித்துள்ளோம். அதனுல் இங்கிலீஷ் கால்வாயில் இருந்த தொல்லை முழுவதும் ஒழிந்தது என்று சொல்லலாம்.

ஆஸ்திரேலியாவுக்கு ஆபத்தில்லை

இனி கிழக்கு அரங்கத்தை எடுத்துக் கொள்வோம். ஆஸ்திரேலியாவுக்கு இருந்த அபத்து அடியோடு ஒழிந்தது. அதற்குப் பதிலாய் இப்பொழுது ஜப்பான் தான் பிடித்த தீவுகளில் ஒன்றன் பின் ஒன்ருய் இழந்து வருகின்றது.

தென்மேற்கு பசிபிக் போர், ஜெனரல் மெக் ஆர்த்தர் தலைமையின் கீழே வெற்றிகாமாய் நடைபெற்று வருகின்றது. 1942-ம் வருஷத்தில் பெரிய எகாதிபத்தியத்தை ஆசியாவிலும் பசிபிக் சமுத்திரத்திலும் ஏற்படுத்த முயன்ற ஜப்பான், இப்பொழுது இடையருது தோல்வியடைந்து வருகிறது. இன்று பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள அமெரிக்க விமானப் படையும்—பெரிய கடற்படையையும் கண்டு ஜப்பான் கலக்க மடைந்திருக்கின்றது. டோஜோவே இம்மே மாதம் 14-ம் தேதி "பசிபிக் பிரதேசத்தில் அமெரிக்க எதிர் தாக்குதல் வலுத்து வருகின்றது; நிர்ப்பயமாகவும் அது நடக்கின்றது. வெகு வேகமாயும் அவர்கள் முன்னேறுகின்றுர்கள்" என்று பேசியிருக்கின்ருரென்றால், அதற்குமேல் நாம் என்ன சொல்ல வேண்டி யிருக்கின்றது. சுருங்கச் சொல்ல வேண்டுமாயின் வட பசிபிக்கில் அலுசியன் தீவிகளிலிருந்து ஜப்பானியர்கள் விரட்டி யடிக்கப்

(10-ம் பக்கம் பார்க்க)

அருணோதயம்

நல்ல அமாவாசை இருட்டு, அது இருக்கும் பொழுதே, திடீரென சூரியன் உதயமாகி விடுகிறதா என்ன? இல்லை. சூரியனுக்கு முன்னால் அருணன் தோன்றுகிறான். கீழ்த்திசையிலே, மெல்ல மெல்ல இருளின் கனம் குறைகிறது. வானம் சிறிது சிறிதாக வெளுக்கிறது. அப்பால் லேசான வெளிச்சம் உலகெங்கும் தோன்றுகிறது. அதைக் கண்டதும், பொழுது விடிந்து விட்டது என்று சொல்லி, எல்லோரும் துள்ளி எழுந்திருக்கிறோம். படுக்கைகளைச் சுருட்டிப் போடுகிறோம். காலைக்கடன்களை முடித்துவிட்டு, மேற்கொண்டு நடக்க வேண்டியவற்றைக் கவனிக்க ஓடுகிறோம். பறவைகளும் பரம சந்தோஷத்துடன் பறந்தோடத் தொடங்குகின்றன. உலகிலே, அருணோதயத்தைக் கண்ட பிரதேசங்கள் உயிர் பெற்றெழுந்தவை போலாகின்றன. பிறகு தான் சூரியன் கம்பீரமாகத் தோன்றுகிறான்.

இதே போல, ஹிட்லர், முஸோலினி, டோஜோ இம்மூவரின் சேஷ்டைகளால், உலகத்தை இருள் மூடிக்கொண்டது. இந்த இருள் விலகவேண்டு மென்றே எல்லோரும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரவு வேளை கழியா இரவாக இருந்து விடப்படாதே என்று எல்லோருக்கும் கவலை.

இனிய விஷயங்கள்

ஆனால், மேற்றிசையில் இருள் படர ஆரம்பித்து ஐந்தாண்டுகள் ஆகப்போகின்றன. அங்கு சில மாதங்களுக்கு முன் தான் அருணோதயமாவதற்கான அறிகுறிகள் தோன்றின. இத்தாலியில் ஏற்பட்டுள்ள வெற்றியும், இரண்டாவது போர் முனைத் தொடக்கமும், அதைத் தொடர்ந்து கிடைத்துள்ள முதல் வெற்றியும், இப்பொழுது ருஷ்யர்கள் திடீரென பின்லாந்து மீது பாய்ந்து, அவர்கள் சிரமப்பட்டு எழுப்பியுள்ள இரண்டாவது மானர்ஹிம் அரணைத் தகர்த்திருப்பதும், அங்குள்ள காவிலிபோர்க் நகரம் வீழ்ந்ததும், சென்ற வியாழனன்று திடீரென, 'ஜப்பான் மீது வெடி குண்டுகள் பலத்த சேதம்' என்று பறந்த செய்தியும், பர்மா பாதைக்கு சுமார் 30 மைலில் சீன-அமெரிக்க-பிரிட்டிஷ் படைகள் சென்றிருப்பதும் இரண்டு நாட்களில் இம்பால் போர் முனையில் நேசப் படைகள் 17 மைல்கள் முன்னேறி யிருப்பதும் இப்பொழுது எங்குமே அருணன் உதயமாகி விட்டான் என்பதை நிச்சயப்படுத்துகின்றன. இனி, சூரியன் உதயமாவது திண்ணம். அந்த உதய காலமும் அதிக தூரத்தில் இல்லை என்று ஒரு சிறு குழந்தை கூட இப்பொழுது தைரியமாகச் சொல்லலாம்.

சுகம் பெற ஆசை

மேற்றிசையில் தான் இரண்டாவது போர் முனை; அதுவே பிரமாதமான செய்தி; கீழ்த்திசை விஷயம் மேற்றிசை விஷயம் முடிந்த பிறகு தான் என்று பலர் எண்ணி யிருந்திருப்பார்கள். அது தவறு, சகல திசைகளிலும் நேசதேசத்தாரின் கவனம் சென்று கொண்டுதானிருக்கிறது. யுத்தத்தை நீடிக்க விட்டிருப்பதில் நேசதேசத்தாரில் யாருக்கும் உத்சாகமுமில்லை, சிரத்தையுமில்லை, பலனுமில்லை. எவ்வளவு சீக்கிரமாக இதை முடிவுக்குக் கொண்டு வருகிறார்களோ, அவ்வளவு சீக்கிரமாக அவரவர்கள் தங்கள் தங்கள் வியாபாரத்தைக் கவனிக்கலாம்; தங்கள் தங்கள் நாட்டின் பொருளாதார நிலைமையையும், மக்களின் வாழ்க்கையையும் சீர்கட்டலாம் அல்லவா? அதற்கு, முதலாவதாக, இப்பொழுது ஒரு மனதுடன் தொடங்கியிருக்கும் யுத்தத்தை வெற்றிகரமாக முடித்து, உலக சமாதானத்தைக் குழி தோண்டிப் புதைக்க முயன்ற அயோக்யர்களை அழித்தொழித்து, இனி சமீப காலத்தில் யுத்தமே மூளாதிருக்க வகை செய்தாக வேண்டுமே!

அமெரிக்கர் கிளப்பிய பீதி

அதனால் தான் அமெரிக்க வீரர்கள் பஸிபிக் பிரதேசத்திலே சற்றும் அயராது ஏதாவது செய்து கொண்டே இருக்கிறார்கள். இவ்வளவு காலம் வரை அவர்கள் ஜப்பானுக்கு இரண்டாயிரம் மைல்களுக் கப்பால் உள்ள இடங்கள் மீது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஆயினும், தாங்கள் செய்யும் காரியங்களால், ஜப்பானுக்கு சீக்கிரமே ஆபத்து வரத்தான் போகிறது என்ற பீதியை ஜப்பானியரது மனங்களில் தோன்றும்படியாகத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள்.

போன வாரத்திலே

போன வாரம் அவர்கள் ஸைபான் என்ற இடத்தில் டாங்கிகளோடு போய் இறங்கினார்கள். அங்கு பலத்த போர் நடந்து கொண்டிருக்கிறது. இது வரை அமெரிக்கப் படைகள் எத்தனையோ இடங்களில் இறங்கியாயிற்று. ஆயினும், எங்கும், இறங்கிய இடத்திலிருந்து கடலில் தள்ளப்பட்டார்கள் என்பதே இல்லை. ஜப்பானியர்கள் தான் அங்கெல்லாம் பின்னுக்கு விரட்டப்பட் டிருக்கிறார்கள்.

ஜப்பான் மீது குண்டு

ஜப்பானியருக்கு முக்கிய கடல் தளமாக உள்ள டிரக் அடிக்கடி பலத்த அடி வாங்கிக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் என்ன பிரயோசனம்? ஜப்பானியர்கள் வலுவுள்ளவர்கள். இதை யெல்லாம் அவர்கள் அதிகம் லக்ஷியம் செய்ய மாட்டார்கள். நேரே அவர்களது மார்பிலேயே போய் உதைக்க வேணும் என்று பலர் எண்ணி யிருந்திருப்பார்கள். அவர்களுடைய உள்ளம் சென்ற வாரம் வந்த 'ஜப்பான் மீது குண்டு' என்ற செய்தியைக் கேட்டு மகிழ்ந்திருக்கு மென்பதில் சந்தேகமேது?.

ஜப்பானிய மூல பூமியில் உள்ள சில முக்கியமான நகரங்கள் மீது, நூதன 'அமெரிக்கப் பறக்கும் கோட்டை' விமானங்கள் ஏராளமான வெடி குண்டுகளை வீசி விட்டு, அதிக நஷ்டமில்லாது திரும்பி விட்டன. இதிலே, பிரமாண்டமான தொரு ஜப்பானிய இரும்பு, எஃகுத் தொழிற்சாலை சேதமடைந்திருப்பது ஒரு முக்கியமான செய்தியாகும். ஒரு முக்கியமான ரயில் பாதை, பல தொழிற்சாலைகள், எல்லாம் நாசமடைந்திருக்கின்றன; இந்த ஒரு விமானப்படை யெடுப்பிலேயே இவ்வளவு சேதம் என்றால், இனி வரப் போகும் படையெடுப்புகளினால் எவ்வளவு சேதம் விளையப் போகிறதோ? ஜப்பானால் இம்மாதிரியான சேதங்களை வெகு காலம் தாங்க முடியாது.

வாயடைத்திருக்கும்!

நேற்று வரை ஜம்பமடித்துக் கொண்டிருந்த ஜப்பானியத் தலைவர்களுக்கு இன்று வாயடைத்துப் போயிருக்கிறது. ஜப்பானுக்கு ஆபத்து வருவது அவர்களுக்கே நிச்சயமாகி யிருக்கும். இல்லாவிட்டால், ஒரு காரணமும் கூறாமல் அவர்கள், ஜப்பானிய மத்திய சர்க்காரிடம் இருந்த பல அதிகாரங்களை மாகாண அதிகாரிகளுக்கே மாற்றியிருப்பதேன்? டோக்கியோவை நேசதேசத்தார் லேசில் விடமாட்டார்கள். ரோமாபுரி, பெர்லின், டோக்கியோ மீது தான் அவர்களுக்குக் கண். ரோமாபுரி விஷயம் தீர்ந்துவிட்டது. பாக்கி இருப்பது பெர்லினும், டோக்கியோவும் தானே? ஆகவே டோக்கியோவிற்கு ஆபத்து வந்தால், சர்க்கார் வேலை நின்று போகக் கூடாதல்லவா? ரொம்பக் கஷ்டம் வந்து விட்டால, ஜப்பானிய சக்கரவர்த்தியையே மஞ்சூரியாவிற்குக் கிளப்பிக் கொண்டு போகவும் அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்களாம்.

அற்புத விமானங்கள்

ஜப்பானை இப்பொழுது தாக்கிய அமெரிக்க விமானங்கள் மகா அற்புத சக்தி வாய்ந்தவை. அவை இந்தியா பர்மா-சீனா போரரங்கத்திலிருந்து பறந்து சென்றிருக்கின்றன என்ற தகவல் எல்லோருக்குமே ஆச்சரியத்தை விளைவித்திருக்கும். சுமார் இரண்டரை மாதங்களுக்கு முன்பே, இந்த விமானங்களை இறக்க ஒரு பெரிய நிலையத்தை சீன மண்ணில் அமைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். கட்டாயத்தின் பேரில் ஐந்து லக்ஷம் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கிறார்கள். வெறும் வயல்களை, அத்தனை பேர்களும் இராப்பகலாக உழைத்து, ஒரு நாசூக்கான விமான நிலையமாக்கி விட்டார்கள். இது போன்ற ராக்ஷஸ வேலை லேசில் எங்குமே நடந்ததில்லை. இந்த விமான நிலையத்திலே அமெரிக்க நூதன விமானங்கள் போயிறங்கின. அங்கிருந்து நல்ல நாள் பார்த்து, அவை ஜப்பானைத் தாக்கி விட்டன. இனி இம்மாதிரியான செய்திகள் அடிக்கடி வரும் என்று எதிர் பார்க்கலாம். அவ்வாறு செய்திகள் நிறைய வர வர, யுத்த முடிவும் நெருங்குகிறது என்று தீர்மானித்துக் கொள்ளலாம். பர்மா ரஸ்தாவும் மீட்கப்படும்படியான காலம் சமீபிக்கிறாப் போலிருக்கிறது. சீன, அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் ஐராவதி பள்ளத்தாக்கை நெருங்குகின்றனவாம். சீக்கிரமே தமது சொத்து, சுதந்திரங்கள் திரும்ப வாராதா என்று, பர்மாவை விட்டு இரண்டாண்டுகளுக்கு முன், திடீரென அநாதைகளாகி ஓடி வந்தவர்கள் எல்லாம், இப்பொழுது நினைத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எண்ணம் கை கூடத்தான் போகிறது, சூரியன் உதயமானதும்.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

டையவும் தடையின்றி போக்கு வரத்து சாதனங்களை உபயோகித்துக் கொள்ள உரிமை யுண்டு. இப்படிப்பட்ட ஏற்பாடுகளால் உலகத்திலுள்ள பல நாடுகளுக்கு இடையில் ஏற்படும் போட்டியையும், மனக்கசப்பையும், மாச்சரியத்தையும், அறவே அகற்றிவிடலாமென்று ஐக்கிய நாட்டுத் தலைவர்கள் நம்புகின்றனர்.

தளவாடப் பெருக்கமே யுத்தத்திற்குக் காரணம்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு நாடும் தன் தன் தேவைக்கு அதிகமாக ஆயுதங்களை உற்பத்தி செய்து கொண்டு போவதால் தான், யுத்தங்கள் ஏற்படுவதற்கு ஏதுவாயிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு நாடும், தன் உள்நாட்டு அமைதியைக் காப்பாற்றுவதற்காக எவ்வளவு ராணுவம் அவசியமோ அதற்குமேல் ராணுவத்தைப் பெருக்கக் கூடாதென்று கண்டிப்பான தடை ஏற்படுத்த வேண்டுமென்று ஐக்கிய நாட்டுத் தலைவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். இந்த யுத்தம் முடிந்ததற்குப் பின், ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் எந்தவிதமான அபிப்பிராய பேதம் ஏற்பட்டாலும் அதைத் தீர்த்து வைப்பதற்கு ஒரு சர்வதேச சபை ஏற்படுத்தி, தன் முடிவை நிறைவேற்றி வைப்பதற்கான ராணுவ பலத்தை அந்தச் சபையிடம் ஒப்படைத்துவிட வேண்டும். இந்த சர்வதேச ஸ்தாபனத்திற்கு சகல நாடுகளும் அடங்கி நடக்கவேண்டும்.

நிரந்தர சமாதான முயற்சி

இந்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு யுத்தத்திற்குப் பின், உலகில் நிரந்தரமான சமாதானத்தை நிலை நாட்ட முயற்ச்சி செய்ய வேண்டுமென்று ஐக்கிய நாட்டுத் தலைவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். உலக சரித்திரத்திலேயே இவ்வளவு பெரும்பான்மையான நாடுகள் ஒன்று சேர்ந்து, யுத்தத்தை ஒழித்து, சமாதானத்தை நிலை நாட்டுவதற்காக, தங்கள் தனிப்பட்ட உரிமைகளையும் விட்டுக் கொடுத்து, ஒரு சர்வ தேச ஸ்தாபனத்திற்குக் கட்டுப்படுவதாகவும் முன் வந்திருப்பது இதுவே முதல் தடவை. இது மிகவும் பாராட்டத் தக்கது. யுத்தம் முடிந்தவுடன் ஐக்கிய நாட்டுத் தலைவர்கள் தாங்கள் இதுவரை உலக சீர்திருத்தத்திற்காக பிரஸ்தாபித்து வந்துள்ள கொள்கைகளை எல்லாம் மனப்பூர்வமாக நிறைவேற்றி வைப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படி நடக்குமானால் உலகத்தில் குறைந்தது நூறு வருஷத்திற்கு மக்கள் யுத்த பயமின்றி சமாதானத்தோடும் சுபிக்ஷத்தோடும் வாழ முடியும் என்பது எனது முழு நம்பிக்கை.

—திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட பிரசங்கம்

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

பட்டார்கள். மத்திய பசிபிக்கில் கில்பர்ட் கூட்டத்தைச் சார்ந்த மாக்கின், டாரவா தீவுகள் கைப்பற்றப் பட்டிருக்கின்றன. அதே மாதிரி அட்மிரால்டி, மார்ஷல் தீவுகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. ஜப்பானியரின் பேர்ல் ஹார்பர் என்று சொல்லப்படும் மத்திய பசிபிக் சமுத்திரத்திலுள்ள டிரக், பானபி, சமீபத்தில் தாக்கப் பட்டிருக்கின்றன. தவளைப் பாய்ச்சல் போன்று தீவுகளைப் பிடித்துப் பிடித்துக் கடல்வழியாய் ஜப்பானைத் தாக்க துரித ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதுகாறும் ஜப்பான் 2,500,000 டன் எடைக் கப்பல் சேதம் அடைந்திருக்கின்றது. வருடமொன்றுக்கு 900,000 எடை உற்பத்தி செய்யும் சக்தியுடைய ஜப்பானால் இழந்த கப்பல் நஷ்டத்தை எப்படி நிவர்த்தி செய்துகொள்ள முடியுமென்பதை யோசித்துப் பாருங்கள்.

தென் கிழக்காசிய யுத்த முனை

இனி, ஜப்பானைக் கடல், தரை, ஆகாய மூலம் தாக்கவும், இழந்த பர்மா, மலேயா முதலிய நாடுகளை மீட்கவும்—சீனாவுக்கு உதவிபுரியவும் அட்மிரல் லூயிஸ் மவுண்ட்பேட்டன் தலைமையில்—தென்கிழக்கு ஆசிய யுத்தமுனைக் காரியாலயம் சென்ற அக்டோபரிலிருந்து நிறுவப் பட்டிருக்கின்றது. இத்தலைமையின் கீழ் இந்திய பர்மா எல்லையில் போர் நடந்து வருகின்றது. அஸ்ஸாம் எல்லையில், கொஹிமா பக்கத்திலும் இம்பால் சம வெளியிலும் ஒரு பக்கம் யுத்தம் நடந்து கொண்டிருக்கின்றது. மற்றொரு படை அமெரிக்கர்களும் சீனர்களும் சீன எல்லைப்புறத்திலிருந்து ஜெனரல் ஸ்டில்வெல் தலைமையில் வட பர்மாவில் வடக்கிலிருந்து தெற்கே முன்னேறுகின்றார்கள். ஆகாய விமானம் மூலம் செல்லும் மற்றொரு படை இம்பால் சம வெளியில் போரிடும் ஜப்பானியப் படைக்கு 150 மைலுக்குப் பின்னால் இருந்துகொண்டு எதிரிகளுக்குத் தொல்லை விளைவித்துக் கொண்டிருக்கின்றது.

நேசநாட்டினர் மகா நாடுகள்

டுனீசியா வெற்றிக்குப் பிறகு நேச நாட்டாரின் சம்பந்தமான பல மகா நாடுகள் நடைபெற்றிருக்கின்றன. அம்மகா நாடுகளில், எல்லா அரங்கங்களிலும் யுத்த ஏற்பாடுகள் செய்வது குறித்தும் எதிரிகளைச் சீக்கிரம் ஒழிப்பதற்கு வழிகள் கோலுவது பற்றியும் கலந்து பேசி மிக முக்கிய முடிவுகள் செய்யப்பட்டன. இத்தகைய மகாநாடுகளில் முக்கியமானவை கியூபெக் மகாநாடு; கெய்ரோவில் கூடிய முதலாவது இரண்டாவது மகா நாடுகள், தெஹிரான் மகாநாடு—இம்மகா நாடுகள் எல்லாவற்றிலும் பிரதம மந்திரி சர்ச்சிலும் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட்டும் கலந்து கொண்டனர். டெஹரான் மகாநாட்டில் இவர்களுடன் தளகர்த்தர் ஸ்டாலின் பங்கெடுத்துக் கொண்டார். கெய்ரோ இரண்டாவது மகாநாட்டில் துருக்கியின் தலைவர் கலந்துகொண்டார். இம்மகா நாடுகள் தவிர மாஸ்கோவில் நேசநாட்டாரின் அந்நிய நாட்டு மந்திரிகள் மகாநாடும் நடைபெற்றது.

நேசநாடுகளின் எச்சரிக்கைகள்

வேறொரு முக்கியமான விஷயம் நான் சொல்லியாதல் வேண்டும். யூகோசிலேவியாவில் தளகர்த்தர் டிட்டோவின் கீழ் நாசிகளுக்கு எதிரிடையாய்ப் போர் நடத்தும் விடுதலைப் படைகள் பிரிட்டிஷாரால் ஒப்புக்கொள்ளப்பட்டன. இவைகட்கு எல்லா உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இப்படைகள் பால்கனில் நாசிகளை எதிர்த்துப் போராடுகின்றன. இனி மற்றொரு மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடிய செய்தி துருக்கி ஜெர்மனிக்குக் குரோம் அனுப்புவதை நிறுத்தியிருப்பது. துருக்கி ஒவ்வொரு மாதமும் 3,000 முதல் 7,000 டன் வரை யுத்தத்திற்கு உதவக்கூடிய குரோம் அனுப்பிக் கொண்டிருக்கின்றது. சமீபத்தில் டீவாலராவின் அயர்லாந்தின் மேல் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும், ஜெர்மனிக்குப் பல வகையில் உதவி செய்துவரும் ஸ்பெயினுக்கும் போர்ச்சுகலுக்கும் துருக்கிக்கும் விடுத்துள்ள எச்சரிக்கைகளும் கவனிக்கத் தக்கவை.

கடைசியாக எல்லோரும் எதிர் பார்க்கும் இரண்டாம் போர் முனையைப் பற்றிச் சிறிது கூற விரும்புகின்றேன். ஐரோப்பாவை நாஜிகளின் கொடுமையிலிருந்து விடுவிக்க ஏற்பட்ட இப்போர் முனை சம்பந்தமாய், கியூபெக் மகாநாட்டில் சில முடிவுகள் செய்யப்பட்டு அவைகளையொட்டி எல்லா ஏற்பாடுகள் செய்ய, ஜெனரல் ஐசன்ஹோவர் தலைவராக சென்ற டிசம்பர் 24-ல் நியமனம் செய்யப்பட்டார். இப்பொழுது நாசிகளைப் பல பக்கங்களிலிருந்தும் தாக்குவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிவாய் விட்டன. அதனால் படையெடுப்பு எப்பொழுது எப்பொழுது என்ற கேள்வியே எங்கும் கேட்கப் படுகின்றது. படையெடுப்புப் படைகளையும் ஏற்பாடுகளையும் இங்கிலாந்து, கானடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா பிரதம மந்திரிகளும், இந்தியாவின் பிரதிநிதிகளும் பார்வையிட்டுப் பாராட்டியிருக்கிறார்கள். தளகர்த்தர் சுமட்ஸ் அப்படைகளைப் பார்த்து ' படையெடுப்பு வந்துகொண்டிருக்கின்றது வீரர்களே !'' என்று கூறினாராம். மன்னர்பிரானும் எல்லாவற்றையும் பார்த்து சரி சொல்லிவிட்டார்.

எது பிரியம் ?

ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா, பின்லாந்து முதலிய அச்சு நாட்டுகளின் கூட்டாளிகளுக்கு ஜெர்மனியுடன் சேர்ந்து படுதோல்வியுற்று அழிந்து போகப் பிரியமா? அல்லது நேச நாட்டாருடன் சேர்ந்து வரப் போகும் வெற்றியில் பங்கு கொள்ளப் பிரியமா? என்று கேட்கப்பட்டிருக்கின்றது. படையெடுப்பை எதிர் நோக்கிக் கொண்டு பேராவலுடன் இருக்கின்றார்கள் நாஜிகள் கொடுமையால் அவதிப்படும் ஐரோப்பிய மக்கள். விடுதலை எப்பொழுது என்று அவர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நம் படைகள் எந்நேரத்திலும் ஐரோப்பாவைத் தாக்கலாம். நான் பேசிக் கொண்டிருக்கும் இப்பொழுதும் தாக்கிக் கொண்டிருக்கலாம். ஸ்டாலின் மே நாளன்று கூறியது போல், நம் பகைவன் காயப்பட்டு குகைக்குள் இருக்கின்றான். அவனை அங்கு சென்று கொல்லவேண்டும். இதுவே தான் நாம் இப்பொழுது செய்கின்றோம், செய்யப் போகின்றோம்.

—திருச்சி, அகில இந்திய வானொலி நிலையத்தினின்று சமீபத்தில் ஒலி பெருக்கப்பட்ட பிரசங்கம்.

முதல் வெற்றியின் ரகசியங்கள்

நேச தேசப் படைகள் ஜூன் 6-ந் தேதி அதி காலையில் வட பிரான்ஸிலே, நார்மண்டிப் பிரதேசத்திலே சென்று இறங்கின அல்லவா? அன்றிலிருந்து இன்று வரை, பதினைந்து நாட்களுக்கு மேலாகிவிட்டன. ஆயினும் நேசப் படைகள் இந்த அரை மாத காலத்தில் அதிக தூரம் பிரான்ஸிற்குள் முன்னேறி விடவில்லை. ஆனால், அவர்கள் தங்களது படையெடுப்பிலே முதல் வெற்றியைச் "சம்பாதித்துக்" கொண்டு விட்டார்கள். இது ஒரு பெரிய காரியம் தான். இதுவே அவர்கள் ஆதியில் போட்ட திட்டத்திலும் எதிர் பார்த்த முதல் வெற்றி. ஆகவே, நேச தேசத்தார் தங்களுக்குக் கிடைத்த இந்த வெற்றிக்காக கடவுளுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருக்கிறார்கள். இந்த நன்றியைச் செலுத்தவும் அவர்கள் தயங்க வில்லை.

பிரமிப்போம்!

இந்த வெற்றி, பார்வைக்கு மிகச் சிறியதாக இருந்தபோதிலும், இதைச் சம்பாதிப்பதில் எவ்வளவு சிரமமிருந்தது என்பது அந்த இரண்டாவது போர் முனைக்கு ஆறுயிரம் மைல்களுக்கு அப்பால் சுகமாக இருக்கும் நமக்குப் பூரணமாகத் தெரியாது. ஏதோ பத்திரிகைகளில் செய்திகளை வாசிக்கிறோம். 'த்சு! த்சு! த்சு!' என்று இரக்கப்படுகிறோம். அதோடு தீர்ந்தது. ஆனால், நேச தேசத்தார் பெற்றுள்ள இந்த முதல் வெற்றியைப் பற்றியும், அதன் ரகசியங்களைப் பற்றியும் முழுத் தகவல்கள் பின்னர் வெளியாகும் பொழுது, நாம் ஒவ்வொருவரும் நம் மூக்கு மீது விரல் வைத்து, பிரமித்து நிற்போம் என்பதில் சந்தேகமேயில்லை.

காதலன், காதலி வரவேற்பு இருக்குமா?

இப்போதைக்கு செய்தி ஸ்தாபனங்கள் மூலமாகவும் ஜெர்மன் ரேடியோச் செய்திகள் மூலமாகவும் வந்துள்ள தகவல்களைச் சேகரித்துப் பார்த்தால், நேச தேசத்தார் எவ்வளவு எதிர்ப்புகள், எவ்வளவு நஷ்டங்கள், எவ்வளவு கஷ்டங்களுக் கிடையில் இந்த வெற்றியை அடைந்திருக்கிறார்கள் என்பது சிறு குழந்தைக்குக் கூட நன்றாகப் புரியும்.

எடுத்த எடுப்பிலேயே, அமெரிக்கர்கள் பதினாயிரக் கணக்கிலே ஆட்களை இழந்து விட்டார்கள். இந்தச் செய்தி கேட்டு அமெரிக்காவிலே உள்ளவர்கள் பெரிதும் திகிலடைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இது அவர்கள் எதிர்பாராதது அல்ல. இம்மாதிரி, கடல் வழியாகப் போய், எதிரியின் வசமுள்ள பிரதேசத்திலே இறங்குவதென்றால், ரயில்வே பிளாட்பாரத்தில் காதலன் காதலிக்கு அளிக்கும் வரவேற்பை எதிர்பார்க்க முடியுமா என்ன? படு தோல்விக்குக் கூட அவர்கள் சித்தமாக இருந்தே ஆகவேண்டும்.

நாஸிகளுக்கு சனியன்

ஆனால் அமெரிக்க சூரர் ஜெனரல் ஐஸன்ஹோவரிடம் அமெரிக்கருக்குப் பூரண நம்பிக்கை உண்டு. அவருக்கு மட்டுமென்ன? நேச தேசத்தார் அனைவரிடமுமே அவர் நல்ல பெயர் எடுத்து விட்டார். எல்லோரிடமும் ஒரு மரியாதையைப் பெறும் நிலைமையை அடைந்து விட்டாரவர். அமெரிக்கப் போர் வீரர், பிரிட்டிஷ் வீரர் என்ற பேதம் ஒழிய, இவர் பெரும் பாடுபட்டார். அவர் பாடுபட்டது வீணாகவில்லை. நார்மண்டியிலே இறங்கிய அமெரிக்க பிரிட்டிஷ், கனடிய, இந்தியப் படைகளினால் பூரண ஒத்துழைப்பு இருக்கிறது. இது ஜெர்மானியருக்குப் பெரிய சனியனாக முடிந்திருக்கிறது.

அபார நம்பிக்கை!

ஏற்கெனவே, டெஹ்ரானில் மூன்று வல்லரசுகள் சேர்ந்து போட்ட பெரிய திட்டத்தில், கடுகுப் பிரமாணமுள்ளது இந்தப் படையெடுப்பின் முதல் பகுதி என்று தெரிகிறது. ஜெர்மானியர் எங்கும் அதி பலமான பாது காப்பு ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தனர். ரோமல் துரை வெகு ஜரூராகவே நேசப் படைகளை எதிர்க்க இரண்டு மூன்று லக்ஷம் பேர்களைப் போர் முனைக்குக் கொண்டு வந்து விட்டார். இது காரணமாகத் தான் நேச தேசப் படைகள், பதினைந்து நாட்களாகியும் 'ஓஹோ ஹோ' வென்று எத்தகைய முன்னேற்றத்தையும் அடைந்து விடவில்லை.

பெட்டியில் எலி

ஆனால், செர்பூர்க் தீபகற்பத்திலே, ஜெர்மானியர் பெட்டிக்குள்ளகப்பட்ட எலிகள் போலாகி விட்டார்கள். திடீரென அமெரிக்கர்கள், தங்கள் சுய ரூபத்தைக் காட்டிக் கொண்டு, முதலில் தங்களுக்கேற்பட்ட தோல்வியை ஈடுகட்ட, ஆத்திரத்தோடு, அந்தத் தீபகற்பத்தின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடியைப் போயடைந்தனர். அது காரணமாக, ஜெர்மானியரில் முப்பதாயிரம் பேர்கள் அவர்கள் போட்ட கோட்டிற்குள் அகப்பட்டு விழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் தப்ப வழி கிடையாது. ஒன்று அவர்கள் மடத்தனமாக போராடி மடிய வேண்டும். இல்லாவிட்டால், சிறைப்பட வேண்டும். ஆனால், நாஸிகள் லேசிலே கைதிகளாக மாட்டார்கள்.

நடுங்குவது நியாயமே!

இந்த செர்பூர் பிரதேசத்திலே இன்னும் சில இடங்கள் நாஸிகளிடமிருக்கின்றன. அங்கெல்லாம் அவர்களுக்குச் சரியான உதை கொடுத்து, அந்த இடங்களை நேசப் படைகள் பிடுங்கிக் கொண்டு விட்டால், அப்புறம் அப்படைகளுக்கு நல்ல வேட்டை தான். அங்கே இன்னும் மேற்கொண்டு வெகு தாராளமாக, எவ்வித இடைஞ்சலுமின்றி நேச தேசத்தார் எதை வேண்டுமானாலும் கொண்டு வந்து இறக்கலாம். அந்தப் பிரதேசத்திலே நல்ல விமானக் கூடங்களை அமைத்துக் கொண்டு, அங்கிருந்து சிரமமில்லாது ஜெர்மானியரின் படைகளையும், போக்கு வரத்துப் பாதைகளையும் த்வம்சம் செய்யலாமல்லவா? இந்த சௌகரியம் நாஸிகளுக்கேது? அவர்கள் தான், தினம் விடிந்தால், பாழ் நகரங்களிடையிலும், இடிந்த பாலங்கள் மீதிலும், பிணக் குவியல்களிடையிலும் புகுந்து வரவேண்டியிருக்கிறதே! அவர்களைப் பாதுகாக்கவோ போதிய விமானங்க ளில்லை. நேச தேசத்தாரிடமோ, விமானங்கள் கணக்கு வழக்கின்றி இருக்கின்றன. இன்னும் தயாரிக்கவும் அளவற்ற வசதிகளிருக்கின்றன. ஆகவே, நேச தேசத்தார் உத்சாகங் கொள்வதும், நாஸிகள் நடுக்கமுறுவதும் நியாயந்தானே?

நேச தேசத்தாருக்குத் தங்களுக்குள்ள சக்தியில் அபார நம்பிக்கை இருக்கிறது என்பதற்கு ஓரிரு சம்பவங்களை எடுத்து எழுதினால் போதுமே!

ஒன்று பிரதம மந்திரி சர்ச்சில், மன்னர் பிரான், ஜெனரல் டிகால் ஆகியோர் கப்பல் வழி வந்து, நார்மண்டியில் இறங்கி, போர் முனைக்கு ஆறு மைல் வரை சென்று திரும்பிய சம்பவமாகும். இதைக் குறித்து, பார்லிமெண்டில் கூட தடபுடலாகக் கேள்விகள் கேட்டார்கள். இந்த மனுஷர்கள் எல்லாம் தங்களது உயிர்களை லக்ஷியம் செய்யாது, ஆபத்தானதொரு பிரதேசத்திற்குப போனது மடத்தனம் என்று கூடச் சிலர் சொன்னார்கள்.

சர்ச்சிலின் தன்மை.

ஆனால் சர்ச்சிலின் தன்மையை அறிந்த மந்திரி ஒருவர் சட்டென, அவர் யுத்த இலாகாத் தலைவரல்லவா? தானே எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டாமா? இது மட்டுமல்ல. இன்னும் பல ஆபத்துக்களிலும் தன்னைச் சிக்க வைத்துக்கொள்ள அவர் சித்தமாக இருக்கிறார் என்று பதில் கூறினார்.

சரித்திரத்திலேயே பல நூற்றுண்டுகளாகக் கேள்விப்படாததொரு சம்பவம், அரசர் போர் முனைக்குச் சென்றது. அதிலும் அவர் பிரான்ஸிற்கு இது மாதிரியான சந்தர்ப்பத்தில் போய்த் திரும்பினது ரொம்ப அதிசயந் தான்.

பல்லில்லாப் பாம்பு

நாஸிகளின் விமானப் படைகளோ, நீர் மூழ்கிப் படைகளோ பல் பிடுங்கப் பெற்ற பாம்புகளாகி விட்டன; அவற்றால் இப்பொழுது ஒன்றும் செய்ய சக்தி இல்லாது போய்விட்டது என்பதை, அரசரும், சர்ச்சிலும் போர்க்கப்பல்களில் பிரான்ஸிற்குச் சென்று திரும்பிய விஷயம் நிச்சயமாக ரூபிக்கிறது.

அசாதாரண யுத்தம்

நாஸிகளின் சாதாரண சக்தி ஒய்ந்து விட்டது. அதனால் தான், அசாதாரண யுத்தத்தில் ஈடுபட்டு விட்டார்கள் அவர்கள். சீமை மீது விமானியற்ற கோர வெடி விமானங்களை அவர்கள் செலுத்தி வரு

(12-ம் பக்கம் பார்க்க)

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

ஜூன் 15.—யுத்தம் ஆரம்பமானதிலிருந்து நேச நாட்டு வெடி குண்டு விமானங்கள் வீசி யிருக்கும் 4 லட்சம் டன் வெடி குண்டுகளில், 275,000 டன் ஜெர்மனி கேந்திர ஸ்தானங்களின் மீது வீசப் பட்டன.

ஜூன் 16.—விமானி யில்லாத பல ஜெர்மன் விமானங்கள் பிரிட்டனைத் தாக்கிய தாக உள் நாட்டுப் பாது காப்பு மந்திரி மிஸ்டர் ஹர்பெர்ட் மாரிசன் காமன்ஸ சபையில் அறிவித்தார்.

ஜூன் 19.—விமான மோட்டிகளில்லாது வந்து தாக்கிய ஜெர்மன் விமானங்கள் தெற்கு இங்கிலாந்தில் கொஞ்சம் சேத முண்டாக்கின.

அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

ஜூன் 15.—உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் நான்கு வகை சுயேச்சைகளும் வழங்கப்படுமென்னும் உறுதியளிக்கப்பட வேண்டு மென்று, மிஸ்டர் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார். அன்றியும் சர்வ தேச சமரச ஸ்தாபனத்தைக் குறித்தும் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

ஜூன் 17.—இராணுவ டாங்கிகள் உற்பத்தியை வெகு வெகு அதிகமாகப் பெருக்க வேண்டு மென்று, இராணுவ மாபெருந் தலைவர் கட்டளை யிட்டிருக்கிறார்.

ரஷ்யாவும், பின்லாந்தும்.

ஜூன் 15.—கோர்பிகுலியா என்னு மிடத்தை சோவியத் படைகள் கைப் பற்றின.

ஜூன் 16.—ரஷ்ய முன்னணி ரோந்துப் படைகள் மானர்ஹீம் அரணை அடுத்து விட்டன. மேலும் 70 நகரங்களைக் கைப் பற்றின.

அமெரிக்காவிலுள்ள பின்லாந்து மந்திரி ப்ரகோப்பும் அவருடைய மூன்று ஆலோசகர்களும் அமெரிக்காவினின்று வெளியேறி விடும்படிப் பிரயாணச் சீட்டுக் கொடுக்கப்பட்டனர்.

ஜூன் 18.—மானர்ஹீம் அரணைத் துளைத்துக் கொண்டு சோவியத் படைகள் பிஜோர்க், ரெய்ட்டு முதலிய நூறு இடங்களைக் கைப்பற்றின.

ஜூன் 19.—விபோர்க்குக்கு 15 மைல் தூரத்தில் செம்படைகள் இருக்கின்றன.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஜூன் 14.—இம்பாலுக்கு வட கிழக்கே 15 மைல் தூரத்திலுள்ள மோல்வும் கறட்டிலிருந்து ஜப்பானியர்கள் விரட்டப் பட்டு விட்டனர்.

ஜூன் 16.—கொஹிமா பகுதியில் கடிமா என்னு மிடத்தை நேசப்படைகள் கைப் பற்றின. கமாயிங் என்னு மிடத்தை சீனப் படைகள் கைப்பற்றின.

ஜூன் 18.—குர்க்கேவா என்னு மிடத்தை சீனப் படைகள் கைப்பற்றின.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்திய தரைக் கடல் பகுதி.

ஜூன் 14.—நார்னி, பாக்னே ரெஜீயோ, லடேரா ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜூன் 15.—ஆர்விடோ, அக்விலா, ஆர்பெடெல்லா ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜூன் 16.—டெர்னி, டோடி என்னு மிடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூன் 17.—ரோமாபுரிக்கு 120 மைல் தூரத்திலுள்ள கரோஸெட்டோ என்னு மிடத்தை 5-ம் படையினர் கைப்பற்றிக் கொண்டனர். எல்பா என்னும் துறைமுகத்தில் நேசப் படைகள் போய் இறங்கின.

ஜூன் 18.—வட இத்தாலியிலுள்ள சென்ட் ஜார்ஜியோ என்னு மிடத்தில், நேசப் படைகள் வந்திறங்கின. பியரோசா தீவையும் கைப்பற்றின.

ஜெனரல் அலெக்ஸாண்டர் போப்பைச் சந்தித்தார்.

ஜூன் 19.—கம்பெக்னுடிகோவை 5-ம் படையினர் கைப்பற்றினர். அசிசியைக் கைப்பற்றிய 8-ம் படையினர் மத்திய இத்தாலியிலுள்ள பெருகியாவிற்குள் நுழைந்து விட்டனர். எல்பாவிலுள்ள போர்டோ பெர்ரெய்க்கோவை பிரஞ்சுப் படைகள் கைப்பற்றின.

நேச நாட்டு ஆலோசனைக் கௌன்சில் அங்கீகாரத்தின் மேல், சைனர் அய்வானே பொனுமி தலைமையில் புதிய இத்தாலிய அரசாங்கம் ஆதிக்கத்தை மேற் கொண்டது.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

ஜூன் 14.—டோர்ன் என்னு மிடத்தை நேசப் படைகள் கைப்பற்றின. ஜெனரல் டிகால் நார்மண்டியில் போய் இறங்கினர்.

ஜூன் 15.—மாண்டிபர்க், டில்லி, டோர்ன் ஆகிய ஊர்களை நேசப் படைகள் கைவிட வேண்டிய தாயிற்று.

ஜெனரல் டிகால் பிரிட்டனுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

ஜூன் 16.—இன்று காலையில் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் நார்மண்டியில் போர்க்களத்தைப் பார்வையிட்டு விட்டு, இரவு பிரிட்டனுக்குத் திரும்பினர். நேசப் படைகள் மாண்டிபர்க்கைத் திரும்பிப் பிடித்து விட்டன. அமெரிக்கப் படைகள் கயின்வில்லா கோட்டையைக் கைப்பற்றின.

ஜூன் 17.—சென்ட் ஜேக்ஸ் டி நெஹெள, சென்ட் சேவியர்லாவிகாம்டி என்னு மிடங்களை நேசப் படைகள் கைப் பற்றின.

ஜூன் 18.—செர்பர்க் தீபகற்பத்தை அமெரிக்கப் படைகள் முற்றுகையிட்டு வளைந்து கொண்டன.

ஜூன் 19.—மாண்டிபர்க்கை மீண்டும் ஜெர்மானியர்கள் கைப்பற்றினர்.

நடு நிலைமை நாடுகள்.

ஜூன் 15.—துருக்கி அன்னிய நாட்டு மந்திரி மெனிமென்சியோக்லு தன் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். அவர் செய்து வந்த வேலைகளை பிரதம மந்திரி சரஜோக்லு மேற்கொண்டிருக்கிறார்.

ஜூன் 19.—துருக்கி அரசாங்கத்தின் புதிய கொள்கையை யோட்டி "காஸல்" என்னும் ஜெர்மன் கப்பல், டார்டெனெல்ஸ் வழியாகப் போகக் கூடாதென்று துருக்கி அரசாங்கம் தடுத்து விட்டதால், அது திரும்பவும் கருங் கடலுக்குத் திரும்பிவிட்டது.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஜூன் 15.—அமெரிக்க மகா பெரும் வெடி குண்டு விமானக் கோட்டைகள் ஜப்பான் மீது வெடி குண்டுகளை வீசின. டோக்கியோ, நாக சக்கி, ககோஷிமா, மோஜி, ஷிமொனேஸகி, கொகுரா, யாவடா ஆகியவை தான் முக்கியமான குறிகள்.

மாரியானு தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த செய்பான் தீவில் நேசப் படைகள் வந்திறங்கின.

ஜூன் 17.—தென் செய்பானில் சாரன் கனே என்னு மிடத்தை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

கிறார்கள், இவை அதி வேகமாக ஆகாயத்தில் பாய்ந்து சென்று, கீழே விழுந்து, வெடித்து, படு சேதத்தை விளைவிக்கின்றனவாம். இவற்றை ஆகாயத்திலேயே சுட்டுத் தூளாக்க புது வழிகளை பிரிட்டிஷார் கண்டுபிடித்து வருகிறார்களாம். பொது ஜனங்களிடை கிலியை உண்டாக்கவே நாஜிகள் இந்த நூதன ஆயுதத்தை உபயோகிக்கிறார்கள். ஆனல், கிலிக்குப் பதிலாக, வியப்பையே இது உண்டாக்கி வருகிறதாம். 'என்னடா இது, புது வாண வேடிக்கையாக இருக்கிறதே' என்று எல்லோரும் தெருவில் வந்து நின்று வேடிக்கை பார்க்கிறார்களாம். இந்த வகையிலும் நாஜிகளுக்கு ஒரு தோல்வி தான். இனி தோல்வி ஜாபிதா தான் பெருகப் போகிறதே ஒழிய, அவர்களுக்கு வெற்றி என்பது குதிரைக் கொம்பாகத் தான் ஆகப் போகிறது. இதிலே சந்தேகம் வேறு ?

வானொலி நாட் குறிப்புக்கள்.

சென்னை, 1944-ம் ஜூன் 27வ மாலை 7-மணிக்கு—"யுத்த விமரிசம்"—மிஸ்டர் த. பா. நித்தியானந்தம்.

ஷை ஷை ஷை 28வ மாலை 7-மணிக்கு—"யுத்த முயற்சி".

ஷை ஷை ஷை 30வ மாலை 7-மணிக்கு—"பிரயாணத்தைக் குறையுங்கள்".

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.